# வலைக்குள் கிடந்து 49வது சடலமும் கிடைத்தது

# தேடுதல் முயற்சி நீடிக்கிறது

Regiestred as a News Papar in Ceylon விலைசதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 21
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் மாசி 20 ஜுல்ஹஜ் 24 செவ்வாய்க்கிழமை [3-3 70]

யாழ்ப்பாணம், செவ்வாய்

பாலைதீவுப் படகு விபத்தில் மாண்டவர்கள் தொகை இன்னும் சரியாகத் தெரியவில்லை. ஆயினும் நேற்றுப்பிற்பகல் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்ட ஒரு சடலத்துடன் இதுவரை 49 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

## உயிர் தப்பியோர் 12 பேர்

படகு விபத்தில் சிக்கி நீந்திக்கரைசேர்ந்து உயிர்தப்பியவர்கள் பன்னிரண்டு பேர் என்று கடைசியாகக்கிடைத்ததகவல்களிலிருந்துதெரிய வருவதாக யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மாணிக்கம் தெரிவித்தார். தங்களுக்குக்கிடைத்த தகவல்களின்படி படகு விபத்தில் மாண்டவர்களின் தொகை இன்னும் 8 அல்லது 9 ஆக அதிகரிக்கக்கூடுமென்றும் திரு. மாணிக்கம் சொன்னார்.

விபத்தில் சிக்கி, புரண்டு கிடக்கும் ராஜயோகம்' என்ற வள்ளத்தின் சொந்தக்காரரான வெல்லம் பொலிசாரினல் நேற்றும் இரண்டாவது தடவையாக விசாரணை செய்யப்பட்டார். அவரது வாக்கு மூலம் மீண்டும் பதிவுசெய்யப்பட்டது. அவரது படகு விபத்துக்குள்ளான சமயத்தில் அவர் பாலைதீவிலிருந்தாரென்று தெரிகிறது. படகில் சென்ற அவரது மகன் டியூக்வெல்லம் விபத்தில்மாண்டது 'ஈழநாடு' வாசக நேயர்கள் அறிந்ததே.

## வெல்லம் வாக்குமூலம்

விபத்தில் சிக்கியபடகை அங்கிருந்து அகற்றி கரைக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் இன்னும்வெற்றியளிக்கவில்லை. ஆயினும் படகின்கீழ் வேறு சடலங்கள் கிடப்பதற்கான அறிகுறிகள் தென்படவில்லையென்று பொலிசாரும் சுங்கப்பகுதியினரும் தெரிவித்தனர்.

### பிந்தி வந்து சேர்ந்த சடலம்

நேற்றுக் கண்டெடுக்கப்பட்ட சடலம் மார்ட்டின் வீதியைச் சேர்ந்த குடும்பத்தினுடையது. ஏற்கனவே இந்தவிபத்தில் 4 பேரை இழந்துவிட்ட இந்தக்குடும்பத்தைச் சேர்ந்த டொமினிக் என்பவரின் சடலம் தான் மீன்வலையொன்றினுள் சிக்குண்டு கிடந்து கண்டெடுக்கப்பட்டது இன்று காலை அவரது நல்லடக்கம் நடைபெற இருக்கிறது:

# அனுமதி பெற்ற படகுகளே கச்சதீவுக்குச் செல்லலாம்

## படகுகளைபரிசீலனைசெய்ய நிபுணர் குழு வருகிறது

— நமது சிறப்பு நிருபர் —

யாழ்ப்பாணம், செவ்வாய்

நாளை ஆரம்பமாகும் கச்சதீவு அந்தோனியார் திருநாளுக்காகச் செல்லவிருக்கும் யாத்திரிகர்ளின் போக்குவரத்து வசதி பற்றி குறிப்பாக படகுசேவைபற்றியும் நேற்றுக்காலை அரசாங்க செயலகத்தில் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பிரான்சிஸ் பீட்டர்ஸ் கூட்டிய மகாநாடு ஒன்றில் விரிவாக ஆராயப்பட்டது.

### படகுகளுக்கு லைசென்ஸ்

பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கு லைசென்ஸ்' பெற்ற படகுகளை மட்டுமே அனுமதிப்பதென்று மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆயினும் யாழ்ப்பாணப் பகுதியில் ஏழு படகுகளேபிரயாணிகளை ஏற்றிச்செல்வதற்கு 'லைசன்ஸ்' பெற்றிருப்பதாகவும் கச்சதீவுக்குச் செல்வதற்கு துறைகளிலிருந்து பிரயாணிகள் செல்வதற்கு அனுமதியளிக்கப்படாதிருப்பதாலும் படகுச்சேவைக்குவேறு வழிவகைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்று சிலர் யோசனை தெரிவித்தனர்.

மீன்பிடிப் படகுகளை பிரயாணிகளை ஏற்றிச்செல்வதற்கு அனுமதியளிக்கக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட பகுதி அசைஸ் விசாரணை

## வழக்கறிஞர்கள் நேற்று தொகுப்புரை நிகழ்த்தினர்கள்

யாழ்ப்பாணம், செவ்.

மிருசுவில் கொலைமுயற்சி வழக்குத்தீர்ப்பு இன்றுவழங்கப்படலாம். இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ்கோர்ட்டில் நீதியரசர் ஜி. சி. வீரமந்திரி முன்னிலையில் இரண்டாவது தினமாக விசாரணைசெய்யப்பட்டது.

எதிரி சார்பில் ஆஜரான அட்வகேட் திரு. எம். மோதிலால்நேரு, முடிக்குரியதரப்பில் ஆஜரான அட்வகேட் எல். டி. குருசாமி ஆகியோர் நேற்று தொகுப்புரை நிகழ்த்தினார்கள்.

இன்றுகாலை நீதியரசர் உரைநிகழ்த்துவார். இதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்

## "நிவாரணம் வழங்குக"

யாழ்ப்பாணம், செவ்வாய்

'பாலைதீவு சென்ற வள்ளம் கவிழ்ந்ததால் 60க்கு மேற்பட்டோர் உயிரிழந்ததை கேள்விப்பட்டிருப்பீர்கள். விழாக்காலங்களில் மக்களின் கடல் போக்குவரத்தைமுறையாகக் கட்டுப்படுத்தி நடத்தினல் இத்தகைய விபத்துக்களை தவிர்த்திருக்கலாம். இந்த விபத்துப் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவும், இவ்வாறு நடைபெருமல் தடுப்பதற்கும், ஒரு விசாரணைச்குழுவை உடனே நியமிக்குக. உழைப்பவர்களை

# கடற்றொழிலாளர் சுழியோடி பிரேதங்களை கண்டுபிடித்தனர்

யாழ்ப்பாணம், செவ்.

பாலைதீவு படகுவிபத்தில் பலியானவர்களின் சடலங்களை மீட்பதில், வணபிதா பெனட் கொன்சன்ரையின் வேண்டுகோளை ஏற்று குருநகர், நாவாந்துறை கடற்றொழிலாளர்கள் உடனடியாக, குருநகர் சின்னப்புவின் படகில் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்தனர்.

இப்படகில் வணபிதா பெனட் கொன்சன்ரையின் குருநகரைச் சேர்ந்த அரசரத்தினம், கிறிஸ்துராசா, கயித்தால், நாவாந்துறையை சேர்ந்த அறுக்காஞ்சிநேசராசா, யோசை கந்தசாமி, கொட்டடியைச் சேர்ந்த சின்னமணி ஆகியோர் சென்றனர்.

படகு மூழ்கிய இடத்தில் சிகப்புகொடி நாட்டப்பட்டிருந்தது கடற்படையைச் சேர்ந்த ஒரு படகும் அவ்விடத்தில் காணப்பட்டது.

நாவாந்துறை கடற்றொழிலாளர்கள் மிகவும் களைப்படைந்து காணப்பட்டதால் சிறிதுநேரம் தாங்கள் வந்த படகில் ஓய்வுஎடுத்துக் கொண்டார்கள்.

இச்சமயம் கடற்படையினர் கடற்றொழிலாளர்களுக்கு, பல வகையான உணவுகளைக் கொடுத்து தாகத்தையும் தீர்த்தார்கள். கடற்றொழிலாளர்களை பாராட்டி அவர்கள் உச்சாகப்படுத்தினார்கள். மீண்டும் அவர்கள் கடலுக்குள் சென்று மிகுதியாக இருந்த சடலங்களையும், பொருட்களையும் கொண்டுவந்து பொலிசாரிடம் ஒப்படைத்தார்கள்.

கடலுக்கடியில் சாராயப் போத்தல்கள், ருன்சிஸ்டர் றேடியோக்கள, கமருக்கள ஆகிய பொருட்களை கண்டெடுத்து பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

பாலைதீவு கடலுக்குள் சுழியோடி சடலங்களை மீட்டுக் கொடுத்த கோஷ்டியை சேர்ந்த ஒருவர் மேற்கண்ட விபரங்களை நேற்று தெரிவித்தார்.

பாலைதீவு படகு விபத்து

# "ஈழநாடு" ஆதரவில் கஷ்ட நிவாரண நிதி

அட்வகேட் எஸ். டி. குருசாமி ஆகியோர் நேற்று தொகுப்புரை நிகழ்த்தினார்கள்.

இன்றுகாலை நீதியரசர் உரைநிகழ்த்துவார். இதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்படும்.

இவ்வழக்கில் மிருசுவிலில், 69-ம் ஆண்டு மார்ச் 18-ம் திகதி சி. சின்னத்தம்பி என்பவர், நவரத்தினம் என்பவரை கொலைசெய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

தவிர்த்திருக்கலாம். இந்த விபத்துப் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவும், இவ்வாறு நடைபெருமல் தடுப்பதற்கும், ஒரு விசாரணைக்குழுவை உடனே நியமிக்குக. உழைப்பவர்களை இழந்து அவலப்படும் குடும்பங்களுக்கு நிதி உதவி செய்வதற்கும் வேண்டிய நடவடிக்கை எடுக்குக.' இவ்வாறு கோரும் தந்தி ஒன்றை கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் பிரதமர் டட்லி சேனநாயகாவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

மதிப்பதென்று மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆனாலும் யாழ்ப்பாணப் பகுதியில் ஏழு படகுகளேபிரயாணிகளை ஏற்றிச்செல்வதற்கு 'லைசன்ஸ்' பெற்றிருப்பதாகவும் கச்சதீவுக்குச் செல்வதற்கு துறைகளிலிருந்து பிரயாணிகள் செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டிருப்பதாலும் படகுச்சேவைக்குவேறு வழிவகைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்று சிலர் யோசனை தெரிவித்தனர்.

மீன்பிடிப் படகுகளை பிரயாணிகளை ஏற்றிச்செல்வதற்கு அனுமதியளிக்கக் கூடாதென்றும் இதனுல் ஏற்படக்கூடிய விளைவுகளுக்குப் பொலிசார் மீதே பழிசுமத்தப்படுகிறதென்றும் பொலிஸ் அதிகாரிகள் மகாநாட்டில் எடுத்துக் கூறினர்.

மீன்பிடி வள்ளங்களாலும் அந்த வள்ளங்களில் எத்தனை பிரயாணிளை ஏற்றிச் செல்லலாம் என்பது பற்றியும் அந்த வள்ளங்கள் பிரயாணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய நிலையில் உள்ளதுதானு என்பது பற்றியும் ஆராய்ந்து அவைகளுக்கு 'லைசன்ஸ்' வழங்குவது பற்றிச் சிபார்சுசெய்வதற்கென கப்பல் படகுச் சேவை நிபுணர் கோஷ்டியொன்றை உடனடியாக யாழ்ப்பாணத்துக்கு அழைப்பதென்றுமுடிவு செய்யப்பட்டது, இந்த முடிவின்படி உடனடியாகக் கொழும்புக்குத் தந்திச் செய்தி அனுப்பப்பட்டது. இதே சமயம் கச்சதீவுக்குச் செல்ல உத்தேசித்துள்ள படகுச் சொந்தக்காரர்கள் தங்கள் படகுகளுக்கு 'லைசன்ஸ்' பெற வேண்டுமென்பதையும்லைசன்ஸ் பெறுவதற்குரிய வழிமுறைகளையும் கிராம சேவையாளர்கள் மூலம் காரியாதிகாரிகள் அறிவிப்பதற்கானஒழுங்குகளைமேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

றனர்.

படகு மூழ்கிய இடத்தில் சிகப்புகொடி நாட்டப்பட்டிருந்தது கடற்படையைச் சேர்ந்த ஒரு படகும் அவ்விடத்தில் காணப்பட்டது.

நாவாந்துறை கடற்றொழிலாளர்களிடமிருந்த கண்ணுடிகளை அணிந்து இவர்கள் கடலுக்குள் சுழியோடி சென்றபோது பிரேதங்களை கண்டனர்.

கடலுக்கடியில் பிணக்குவியலைக் கண்ட கடற்றொழிலாளர்கள், தைரியத்தை வரவழைத்துக்கொண்டு சடலங்களை ஒவ்வொன்ருக மீட்கத் தொடங்கினர்கள்.

சடலங்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு வருவதை கண்ட கடற்றொழிலாளர்கள் அதிர்ச்சியடைந்தார்கள். அவர்கள் உடலெல்லாம் சிலிர்க்கத் தொடங்கியது. கடற்றொழிலா

# பாலைதீவு படகு விபத்தில் மாண்டோர் விபரம்

**இதுவரை கண்டு பிடிக்கப்பட்டு, அடையாளம் காணப்பட்டு, உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டவர்களின் விபரம் வருமாறு:-**

வேலுப்பிள்ளை கனகராசா (22 வயது), நெடுங்குளம் றேட், கொழும்புத்துறை.
செல்வரத்தினம் அந்தோனிப்பிள்ளை (11 வயது), மார்டடின் றேட், யாழ்ப்பாணம்.
பிலோமினு செல்வரத்தினம் (27 வயது), மார்டடின் றேட், யாழ்ப்பாணம்
செல்வரத்தினம் விஜயன் (9 வயது), மார்டடின் றேட், யாழ்ப்பாணம்
செல்வரத்தினம் செல்வம் (5 வயது), மார்ட்டின் றேட், யாழ்ப்பாணம்
ஜோசெப் அன்ரனி ஜேசுதாசன் (21 வயது), 4-ம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை
வைத்திலிங்கம் தம்பிராசா (29 வயது), பெரியவிளான். இளவாலை
தம்பிப்பிள்ளை சிவப்பிரகாசம் (17 வயது) உயரப்புலம், ஆனைக்கோட்டை
அருணசலம் மகேந்திரன் (19 வயது), வேலணை கிழக்கு, வேலணை
சபாரத்தினம் தனமூர்த்தி (20 வயது) அல்லைப்பிட்டி
செல்லையா கருணகரன் (27 வயது), வேலணை கிழக்கு, வேலணை.
ஆறுமுகம் ராஜதுரை (30 வயது), அரியாலை மேற்கு, அரியாலை
சின்னத்துரை ஞானசேகரம் (18 வயது), வேலணை கிழக்கு, வேலணை
தம்பையா இரத்தினசிங்கம், (28 வயது) பூநகரி, மரத்தடி
ரி சுப்பிரமணியம் (28 வயது), காரைநகர்
இம்மனுவேல்பிள்ளை பிரான்ஸிஸ் (12 வயது), பிரான்ஸிஸ், விளான். இளவாலை
வெல்லம் டியூக் (18 வயது) குருநகர்.
இந்திரா ஜெயபதி (10 வயது), பெரியவிளான்
மாரிமுத்து செட்டி ஐயம்பெருமாள் (17 வயது) செட்டித்தெரு யாழ்ப்பாணம்
கணேஷ் தேவராசா (7 வயது), செட்டித்தெரு, யாழ்ப்பாணம்
சுமதி (2 வயது), செட்டித்தெரு, யாழ்ப்பாணம்
ந. ஜெகதீஸ்வரி (7 வயது) சொட்டடி, யாழ்ப்பாணம்
நாகேஸ்வரி (22 வயது) செட்டித்தெரு, யாழ்ப்பாணம்.
கணேஷ் சாந்தினி (22 வயது) செட்டித்தெரு, யாழ்ப்பாணம்.
செல்லையா அந்தோனிப்பிள்ளை (35 வயது) பண்டைத்தெருப்பு
சின்னத்துரை நாகரத்தினம் (45 வயது) அரியாலை மேற்கு, அரியாலை
பவளம்மணி (40 வயது) அரியாலை மேற்கு, அரியாலை
கனகசபை சின்னத்துரை (40 வயது), செட்டியார் குறிச்சி, பூநகரி
செல்லையா ராதாகிருஷ்ணன் 17 வயது), வேலணை கிழக்கு, வேலணை
அந்தோனிப்பிள்ளை விஜயன் (35 வயது), சில்லாலை, பண்டைத்தரிப்பு
சுப்பிரமணியம் கந்தசாமி (22 வயது) வேலணை கிழக்கு, வேலணை
றபீல் மரியதாஸ் (24 வயது), 4-ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை
கருணகரன் ராஜரத்தினம் (22 வயது) மண்கும்பான் கிழக்கு, மண்கும்பான்
தம்பிப்பிள்ளை கனகம்மா (45 வயது), சண்டிலிப்பாய்.
கந்தையா சிவசுப்பிரமணியம்(22வயது),54/8,விதானையார்லேன், பண்டியன்தாழ்வு
ஜோசெப் இரத்தினசிங்கம் (45 வயது) ரெம்பிள் வீதி, நல்லூர்
ஆறுமுகம் வெற்றிவேலு (பொன்னுத்துரை), (45) சிவகுருநாதன் லேன், நீராவியடி
சுப்பையா தர்மலிங்கம் (52 வயது) மட்டுவில் நாடு, பூநகரி
நாகமுத்து செல்லையா (14 வயது), வேலணை கிழக்கு, வேலணை
கந்தையா விஜயரத்தினசிங்கம் (20 வயது), பெரியவிளான், இளவாலை.
ஞானப்பிரகாசம் தேவசகாயம் (45 வயது) ஆனைக்கோட்டை
கிறிஸ்தோ ஜோசெப் (24 வயது), நாரந்தனை
சவிரி இம்மனுவேல் (30 வயது), பெரியவிளான், இளவாலை
நாகர் வரப்பிரகாசம் (65 வயது), மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய்
கணபதிப்பிள்ளை பாலசிங்கம் (17 வயது) வேலணை கிழக்கு, வேலணை
சதாசிவம் வேலழகன் (15 வயது), வேலணை

கச்சதீவு யாத்திரிகர்களுக்கு அறிவிப்பு:

# 'லைசென்ஸ்' இல்லாத படகுகளில் ஏறவேண்டாம்

## அரசாங்க அதிபர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

**'லைசென்ஸ்பெருத படகுகளில் கச்சதீவுக்குபிரயாணம் செய்யவேண்டாம். அத்துடன்பகல்நேரங்களில் மட்டும் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டும்'**

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எவ். ஸி. பீட்டர்ஸ் நேற்று இவ்வாறு அறிவித்தார்.

பாலைதீவு கடலில் நடந்த கோர விபத்தைத் தொடர்ந்து கச்சதீவு செல்லும் பிரயாணிகளும், படகுக்காரர்களும் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இந்த நடவடிக்கையைமேற்கொண்டுள்ளார்.

படகுச் சட்டம், விதிகள் மிகவும் கடுமையாக அனுசரிக்கப்படவுள்ளது.

வடபகுதிபொலிஸ்அதிபர் சட்டவிரோத குடியேற்றத் தடுப்புப் பகுதி பொலிஸ்சுப்ரின்டன், உயர் அதிகாரிகள் கடற்படை உயர் அதிகாரி ஆகியோர் இதுசம்பந்தமான விதிகளை கடுமையாக அமுல் நடத்த ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

படகுப் பிரயாணம் சம்பந்தமான சட்டத்தின்படி 'லைசென்ஸ்' பெருத படகுகள் கச்சதீவுக்கு யாத்திரீகர்களைக் கொண்டுசெல்ல அனுமதிக்கப் படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவு திருநாள் 8ந்தேதி நடைபெறும் சுற்றுப்பிரகாரத்துடன் முடிவடையவிருக்கிறது யாத்திரீகர்கள கச்சதீவுக்குச்செல்ல இப்போதே ஆரம்பித்துவிட்டார்கள.

'லைசென்ஸ்' பெருதபடகுகளில் பிரயாணம் செய்ய வேண்டாமென யாழ். அரசாங்க அதிபர் யாத்திரீகர்களை எச்சரிக்கிருர். அத்துடன் பகல் நேரங்களிலேயே பிரயாணம் செய்யுமாறும் அவர் தெரிவிக்கிருர்.

படகுப் பிரயாணம் சம்பந்தமான சட்டம் கடுமையாக அமுல் நடத்தப்படுவதால், கச்சதீவுக்குச் செல்லும் யாத்திரீகர்கள் கச்சதீவுக்குச் செல்வதற்கான துறைகளுக்குச் செல்லும் போது அங்கு 'லைசென்ஸ்' பெற்ற படகுகள் போதியளவு இல்லாதிருப்பின், அங்கு தங்கிச் செல்வதற்கான ஏற்பாடுகளை தாங்களே செய்து கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், யாத்திரீகர்கள் பரிதவிக்கவேண்டியநிலை ஏற்படுமென்று எச்சரிக்கப்படுகிருர்கள்.

படகு சம்பந்தமான சகல சட்டங்களுக்குட்பட்டு லைசென்ஸ்பெற்ற படகுகளே சாமான்களையும், யாத்திரீகர்களையும் ஏற்றிச்செல்லலாம் என்ப் படகுக்காரர்கள் எச்சரிக்கப்படுகிருர்கள்.

---

திருக்கேதீஸ்வரத்துக்கு

# விசேட பஸசேவை

யாழ்ப்பாணம். செவ்.

மகாசிவராத்திரியை முன்னிட்டு இம்மாதம் 5,6,7-ம் திகதிகளில் திருக்கேதீஸ்வரத்துக்கு செல்லும் யாத்திரீகர்களுக்குவிசேடபஸ்சேவையை இலங்கைப் போக்குவரத்துச்சபையினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

இத்தினங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து கேரதீவுக்கு அரைமணி நேரத்துக்கு ஒரு முறையும், சங்குப்பிட்டியிலிருந்து திருக்கேதீஸ்வரத்துக்கும் அரைமணிக்கு ஒரு முறையும் பிரயாணிகளைக் கொண்டுசெல்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுளளன.

# "ஈழநாடு" ஆதரவில் கஷ்ட நிவாரண நிதி

பாலைதீவிலே ஏற்பட்ட கொடிய படகு விபத்தில் உயிர் இழந்தோர் எண்ணிக்கை இன்னும் அதிகரித்து வருகிறது. தலைவர்களை இழந்து பரதவிக்கும் எளிய குடும்பங்கள் எவ்வளவோ! நெஞ்சை உருக்கும் விபத்தினுல் தஞ்சமின்றி வாடுகின்ற குடும்பங்களுக்கு உதவுவது நம்மவர் கடமையாகும்.

ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்ந்து தவிக்கும் குடும்பங்களின் உதவிக்காக 'ஈழநாடு' ஒரு கஷ்ட நிவாரண நிதி இன்றுமுதல் ஆரம்பிக்கின்றது. இதற்காக நியமிக்கப்பெற்றுள்ள ஒரு விசேஷ கமிட்டிக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் எவ். ஸி. பீட்டர்ஸ், தலைவராகவும் வண. பிதா மதுரநாயகம் செயலாளராகவும், டாக்டர் கே. கனகரத்தினம், வடபகுதி பொலிஸ் அதிபர் ஆர். சுந்தரலிங்கம் ஆகியோர் அங்கத்தவராகவும் கடமையாற்றுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கையில் சூருவளி, வெள்ளம் போன்று பெரு விபத்துக்கள் ஏற்பட்ட போது, 'ஈழநாடு' முன்வந்து நிதி திரட்டி, கஷ்ட நிவாரணத்துல் ஈடுபடடு அவற்றினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரிந்தது அன்பர்கள் அறிந்ததே.

சமீப சரித்திரத்தில் ஏற்பட்டிராத இந்தப் படகு விபத்தினுல் தலைவர்களை இழந்து பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களுக்கு உதவி அளிக்க அன்பர்கள் பலரும் தாராளமாக முன்வருவது நம்பிக்கை.

**'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்** என்ற விலாசத்துக்கு உங்கள்உதவிகளை அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

**உதவி வழங்கியோர:**

| | |
|---|---|
| 'ஈழநாடு' லிமிட் | ரூ. 500-00 |
| கொழும்பு ஸ்ரீகிருஷ்ணகாப்பரேஷன் லிமிட்டெட் நிர்வாக டைரக்டர் கே. செல்வநாதன் மூலமாக | ரூ. 1000-00 |

# கள்ளக்கடத்தலை தடுக்க விமானங்கள் வருகின்றன

மல்லாகம், செவ்வாய்

கச்சதீவு உற்சவத்தைமுன்னிட்டுவிமானப்படைமுகாம் ஒன்று தற்காலிகமாகபலாலி விமானநிலையத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. விமானப்படை வீரர்கள் நேற்று இங்கு வந்து சேர்ந்தனர்.

கச்சதீவுப்பகுதியில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடவிருக்கும்விமானங்கள் இந்த முகாமிலிருந்தேபுறப்படுச் செல்லும், விமானங்களுக்கும், முகாமுக்குமிடையே தந்தித்தொடர்புச் சேவை இணைக்கப்படடுள்ளது.

3 விமானங்கள் இன்று பலாலிவந்தடையவிருக்கின்றன. 5 ஜீப்வண்டிகளும் கடற்கரையில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் படும். கள்ளக்கடத்தல், கள்ளக்குடியேற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகளில் விமானங்கள் ஈடுபடும்.

---

# சென்னை வானொலியில்

## ஈழத்துப் பாடகர்

வெள்ளவத்தை, திங்கள்

ஈழத்து சங்கீதவித்துவான் திரு. ஏ. கே. கருணகரனின் இசைநிகழ்ச்சி இம்மாதம் 5-ம் திகதி வியாழக்கிழமை சென்னை வானெலியில் நடைபெறவிருக்கிறது, காலை 10 மணிமுதல் 10-30 வரையும் பி. ப. 1 மணி முதல் 1-30 மணிவரையும் இரண்டுதடவைகள் இவரது கச்சேரி ஒலிபரப்பாகும். திரு. கருணகரன் நெல்லியடி அரசினர்மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

எங்களுடைய கபேயில் கீழ்க்கண்ட பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 1. காசாளர் (Cashier) இருபாலாரும்விண்ணப்பிக்கலாம். 2. சப்ளையர்கள் முழு விபரங்களுக்கும் நேரில் வந்து சந்திக்கவும் அல்லது எழுதவும். உரிமையாளர், யோகா கபே, வட்டுக்கோட்டை. 1892

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 22 ஸ்ரீ 9000 தொடர்பிலக்கமுள்ள Fordson Dextra டிராக்டர் விற்பனைக்குண்டு. சி. எஸ், கணபதிப்பிள்ளை அன் சன்ஸ், 51, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1657

4 1/2 பரப்புக் காணி கல் வீடு, கிணறு சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. வருமானங்கள் உள்ளது. விபரங்களுக்கு: ஞா. வரப்பிரகாசம் (செல்லையா மேசன்), 23/4, ஆனந்தன், வடலி வீதி, 1-ம் ஒழுங்கை, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். 1893

காணி:

யாழ்ப்பாண நகரில் நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் 3 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு. நேரில் வரவும். அ. சோமசுந்தரம், 174, கோவில்வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். 1896

### வாடகைக்கு

சகல நவீன வசதிகளுடன் வீடு (மானிப்பாய் இந்துக் கல்லூரி - இந்து மகளிர் கல்லூரிக்கருகாமையில்) 1-4-70 தொடக்கம் வாடகைக்குண்டு சு. பாலரெத்தினம், கமத்தொழில்சேவை இலாகா, அரசாங்க அலுவலகம், யாழ்ப்பாணம். 1895

### அறிவித்தல்

அச்சுக் கோப்பாளர்களாகவும், புத்தகம் கட்டுபவர்களாகவும் பயில்வோருக்கான விண்ணப்பங்கள் கோரல் முடிவடைந்தது.

'ஈழநாடு'. 1970

### நன்றி

பாலைதீவு கடல் விபத்தில் அகாலமரணமான இல: 27ல் வசிக்கும் மார்ட்டின் வீதியிலுள்ள எங்கள் செல்வரத்தினத்தின் மனைவி கைம்பெண் பிலோமினுவினதும் பிள்ளைகள் அந்தோனிப்பிள்ளை, அல்போன்ஸ், அலெக்சாண்டர், பிலோமினுவின் தம்பி டொமினிக் ஆகியோருடைய மரணச் சடங்கில் கலந்துகொண்ட சகலருக்கும் பணஉதவி அளித்தவர்களுக்கும் சென் சாள்ஸ் ஆசிரியர்கள், மாணவர்கள், டயருூம்ஸ், வண. மேற்றுனியாண்டவர், குருக்கள், கன்னியர், சுற்றுடலில் வசிக்கும் மக்களுக்கும் றேமண்ட்ஸ்ஸுக்கும் மனப்பூர்வமான நன்றி.

இறந்தவர்களின் உறவினர்கள் 1897

### விளம்பரம்

இச்சமாசத்திற்கு ஒரு முக்கிய கணக்குப் பதிவாளர் தேவைப்படுகிறது. இதன் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமையுடையவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பஞ் செய்யலாம். விண்ணப்பங்கள் பதிவுத்தபால் மூலம் 15-3-70க்குள் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

வேதனக் கிரமம்

ரூபா 180/- — ரூபா 280/-

10 X 10

தகைமைக்கு ஏற்றவாறு ஆரம்பச்சம்பளம் உயர்த்தப்படவும் கூடும்.

பிணை: ரொக்கம் ரூபா 1000/-

ஆதனம் ரூபா 2000/-

தகைமைகள்: 30 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலுமிருக்க வேண்டும்.

கூட்டுறவு உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் அல்லது

கூட்டுறவு ஸ்தாபனங்களிலோ, கூட்டுத்தாபனங்களிலோ, அரசாங்கத்திலோ கணக்குச் சம்பந்தமாக 10 வருட அனுபவம் நிறைந்தவர்கள் அல்லது

பொதுக் கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சை (சாதாரண பிரிவு) சித்தியுடன் 10 வருட வியாபார அனுபவம் பெற்றவர்கள் அல்லது பட்டதாரிகள் விண்ணப்பஞ் செய்யலாம்.

ஆ. கந்தையா,
கௌரவ காரியதரிசி,
1-3-70.

புலோலி ப. நோ. கூ. ச. சமாசம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. 1971

## விளையாட்டுப் போட்டி

ஊரதீவு, திங்கள்

புங்குடுதீவு வல்லின் ஸ்ரீ சண்முகநாத வித்தியாசாலை பழைய மாணவர் சங்கத்தின் மூன்றுவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இம்மாதம் 6-ம்திகதி காலை விளையாட்டரங்கில் மாபெரும் விளையாட்டுப்போட்டியொன்று நடைபெறவுள்ளது.

## உரும்பராய் வெற்றி

உரும்பராய், திங்.

வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி பிரிவின் கீழ் நடைபெற்று வரும் உதைபந்தாட்டப் போட்டியில் உரும்பராய் விளையாட்டுக் கழகமும் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இப் போட்டியின் இறுதியில் உரும்பராய் கோஷ்டி வீனஸ் கோஷ்டியை 3-2 கோல்களால் வெற்றி பெற்றது.

உரும்பராய் இந்துக் கல்லூரி விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. எஸ். முருகையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## ராமகிருஷ்ண பரமஹம்சர் விழா

யாழ்ப்பாணம், திங்கள்

வருகிற திங்கட்கிழமை பருத்தித்துறை கல்லடி ஒழுங்கை ஸ்ரீ சாரதாநிலையசேவாச்சிரமத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 135 வதுபிறந்தநாள் விழா கொண்டாடப்படும். இவ்விழாவில் மெதடிஸ்த பெண்கள் பாடசாலை மாணவிகளின் பஜனையும், திரு. மு. தம்பிமுத்துவின் சொற்பொழிவும், திருமதி குணலக்ஷ்மி கதிர்காமத்தம்பியின் பக்திப்பாடலும் இடம்பெறும்.

## மகாசிவராத்திரி விழா

மயிலிட்டி, செவ்வாய்

மயிலிட்டி ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்தில் மயிலை இந்து அறநெறிக் கழகத்தாரின் ஆதரவில் வருகிற மகாசிவராத்திரியன்று விசேட பூசைகளும் நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## வெஸ்லி சினிமா

வடபகுதி அசைஸ் விசாரணை

# "எதிரி என் வயிற்றில் கிறிஸ்கத்தியால் குத்தினர்"

## மிருசுவில் கொலை முயற்சி வழக்கு

யாழ்ப்பாணம், செவ்.

எதிரி எனக்கு தோள் மூட்டில் அடித்தார். நானும் ஒரு தடவை அடித்தேன். மூத்த மகனும், மற்றும்பிள்ளைகளும் வருவதைக் கண்டஎதிரி என் வயிற்றில் கிறிஸ்கத்தியால் குத்திவிட்டு ஓடிவிட்டார். குத்தினபின்தான் கத்தியைக் கண்டேன் கத்தியை உடனே எதிரி இழுத்துக் கொண்டு போன போது தான் மயங்கிவிட்டேன். பின் ஆஸ்பத்திரியில் அறிவு வந்தது.

மிருசுவில் கொலை முயற்சி வழக்கில், காயமடைந்தவரான நல்லையா நவரத்தினம் சாட்சியமளிக்கும் போது மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு நேற்று வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஜி சி வீரமந்திரி முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் மிருசுவிலில் 69ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் தேதி சின்னத்தம்பி என்பவர் த நவரத்தினம்என்பவரை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் அட்வகேட் எம் மோதிலால்நேரு, புறக்டர் வி ஆனந்தசங்கரியின் அனுசரணையுடன் ஆஜரானர்: எதிரிக்காக அரசாங்கத்தால் அட்வகேட் த கனகசபை நியமிக்கப்பட்டிருந்தார், முடிக்குரிய தரப்பில் அட்வகேட் எல் டி. குருசாமி ஆஜரானர்.

நவரத்தினம் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: எதிரியை எனக்குத் தெரியும் எனக்கு 5 பிள்ளைகள் உண்டு. கத்தியால் குத்தப்பட்ட நாள் ஞாபகமிருக்கிறது. எதிரிக்கும் எனக்குமிடையில் மனஸ்தாபம் இருந்தது: அன்று 4 மணி போல் வயலில் வேலைசெய்து கொண்டிருந்தேன். ஆடுவராமல் பிள்ளைகள் பார்த்துக் கொண்டிருந்தார்கள் வடக்குப் பக்கமாக ஆட்டின்சத்தமும் பிள்ளைகளின் சத்தமும் கேட்டது எதிரி அங்கு நின்றார். ஆட்டைக்கட்டியிருக்க வேணும், ஏன்எறிவான் என்றேன. நீ சட்டம் கனக்கப் பேசாதே என்று எதிரி எனக்குஅடித்தார். நானும் அடித்தேன், அடித்தபின் எதிரி வயிற்றில் குத்திவிட்டு ஓடிவிட்டார்.

கைக்கடிகாரம் திருடி

# கையும் மெய்யுமாக அகப்பட்டவர் றிமாண்டில்

சங்கானை, திங்கள்

கைக்கடிகாரம் களவாடி ஒருவர் கையும் மெய்யுமாக பொலிசாரிடம் அகப்பட்டுக் கொண்டார். இச் சம்பவம் ஒன்று கொக்குவில் கிழக்கில் நடைபெற்றது.

வேலைத்தலமொன்றில் கடமையாற்றிய விமல ஸ்ரீக்கு சொந்தமான 140 ரூபா பெறுமதியான கைக்கடிகாரத்தை களவாடிய வீரசிங்கம் குணரத்தினம் அல்லது குணம் என அழைக்கப்படுபவர் எல்லோருக்கும் டிமிக்கி விட்டுக் கொண்டுநிற்கையில் பொலிசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதாகவும் உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து சென்ற பொலிசார் சந்தேக நபரைக் கைது செய்ததாகவும் கூறப்படுகிறது.

பொலிசாரைக் கண்டதும் ஓட்டம் பிடித்த சந்தேக நபரை பொலிஸார் துரத்திப் பிடித்து கைக்கடிகாரத்தையும் கைப்பற்றினர்.

யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட வீரசிங்கம் குற்றவாளியாக் காணப்பட்டு இம்மாதம் மூன்றும் திகதி தீர்ப்பு வழங்கும் வரை றிமாண்டில் வைக்கும்படி நீதிபதியால் உத்தரவிடப்பட்டது.

# "சகலருக்கும் கோயிலை திறந்து விடுங்கள்"

# இன்றைய பலன்

மாசிமாதம் 20-ம் திகதி [3-3-70]

சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

**மேஷம்-** புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். அரசியல் வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும், எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள். பெரியோர்கள் ஆசியும் அவசியம் கிடைக்கும்.

**ரிஷபம்-** நம்பிக்கைமோசடி நடக்கும். வியாபாரத் துறையில் நஷ்டமேற்படலாம். அதி முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும். சிலருக்கு வாதரோகம் தென்படக்கூடும். உணவுவிடயத்தில் அதிக சுகாதாரம் வேண்டும்.

**மிதுனம்-** கன்னல்போல் இனிக்கும் வாழ்க்கை; காதலில் வெற்றியுண்டு. பசுமையான நினைவு ஒன்று தலைதூக்கும். இல்லத்தில் இணைப்புகள் இறுகும். வெளியிடத் தொடர்புகளும் திருப்திகரமாக இருக்கும். இன்று சுபதினம்.

**கடகம்-** எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலை வாரிவிடக்கூடும். நிதானம்வேண்டும்.

**சிம்மம்-** அறிஞர்களின் சந்திப்பு இன்று நிகழும். அறவழியில் ஆர்வம் பிறக்கும். ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும்.

**கன்னி-** பலகாலம் எதிர்பார்த்திருந்த பதவிஉயர்வுக்கு வழிகோலப்படும். சிலருக்கு புதிதாகத் தொழில் கிடைக்கக்கூடும். வருவாயும் வளரும்.

**துலாம்-** இளமைநினைவுகள் நிழலாட்டம்போடும், காதல்கணைதாக்கும். கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள். பாலுணர்ச்சி மேலிடும்.

**விருச்சிகம்-** தொழில்புரியும் இடத்தில் கருத்துவேற்றுமைகள் தோன்றக்கூடும், கொடுக்கல்வாங்கல் மூலம் எதிரிகளைத் தேடிக்கொள்வீர்கள். பொருள்விடயத்தில் கவனம்செலுத்தவும்.

**தனுசு-** மனக்கோட்டை கட்டுவீர்கள். எதிர்பார்த்ததில் ஏமாற்றம் விளையும். இன்பசகோதரத்தின் உடல்நலம் பாதிக்கப்படலாம். அபாயகரமான காரியங்களைத் தவிர்த்துக்கொள்ளவும்.

**மகரம்-** வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைமை தென்படும். சிலர் புனைந்துரைகள் கேட்கவும் நேரிடும். உடல்நலன் பாதிக்கப்படலாம். பெண்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும்.

**கும்பம்-** சீறிவரும் கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும். எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக இருக்கும். சிலருக்கு எதிர்பாராதவிதமாக உடல்நலன் பாதிக்கப்படும். பொறுமைவேண்டும்.

**மீனம்-** அறவழிகளை மனம்நாடும். பொதுவிவகாரங்களில் ஈடுபடுவதன் மூலம் பொருட்செலவுக்கு இடமுண்டு சுற்றுடலில் மதிப்பு உயரும். சிலருக்கு காதல் துறையிலும் அனுகூலம் தென்படலாம்.

# நல்லை ஆதீனகர்த்தா இந்தோனேஷியா செல்வார்

கோப்பாய், திங்கள்

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் விரைவில் இந்தோனேஷியா செல்லவிருக்கிறார். அங்குள்ள இந்து இயக்கப் பேரவையும் மற்றும் சைவப்பிரமுகர்களும் சுவாமிகளை அழைத்துள்ளார்கள்.

எதிர்வரும் சிவராத்திரி விழாவில் கதாகாலட்சேபம் செய்யும்பொருட்டு ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் இப்போது ராமேஸ்வரம் சென்றுள்ளார். ராமேஸ்வரத்திலிருந்து

## தென்னை உற்பத்தியாளர் சங்கம் தீர்மானம்

தேவிபுரம், திங்கள்

தேவிபுரம் மத்திய வகுப்பு தென்னைஉற்பத்தியாளர் சங்கப்பொதுக்கூட்டமொன்று கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் அ. பேரம்பலம் தலைவராகவும், திரு. செ. சதாசிவம் செயலாளராகவும் திரு. அ. சண்முகம்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 3—3—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15மெல்லிசை, 7-45 பேட்டி, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர்மன்றம்.

இரவு 6 10 இடைவேளை இசை, 6-15வாத்தியஇசை, 6-30 கிராமசஞ்சிகை 7-00 செய்திச் சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 கர்னாடகஇசை, 7-45 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

### உங்கள் குடும்பம் சந்தோஷமடைய!

குடும்பத் திட்ட முறைகளை கடைப்பிடித்து விரும்பாதபிள்ளைப் பேற்றைத் தடை செய்யுங்கள். ஒவ்வொரு பிள்ளைப் பேற்றுக்கும் இடையில் ஆகக்குறைந்தது மூன்று வருடகாலமாவது இடைவெளி இருக்க வேண்டும். இப்பொழுது இலங்கைமுழுவதிலும் 75,000 தம்பதிகள் குடும்பத் திட்ட முறைகளைக் கடைப்பிடித்து சந்தோஷமாக வாழ்கின்றனர். உங்களுக்கும் குடும்பத்திட்ட ஆலோசனைகளும்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ருக்கான விண்ணப்பங்கள்
கோரல் முடிவடைந்தது.
'ஈழநாடு'.
1970

1-3-70.

புலோலி ப. நோ. கூ. ச.
சமாசம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. 1971


உங்களை மகிழ்விக்க பவனி வருகிறார்கள்

எம். ஜி. ஆர் ஜெயலலிதா

**காதல் வாகனம்**

**வின்ஸரில்**

தினசரி 4 காட்சிகள்



ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா
அசோகன் - சோ - சந்திரபாபு
நடித்த

**அடிமைப் பெண்**



வெற்றிகரமான 2 வது மாதம்

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

**வெலிங்டன்** யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்





**சிவாஜிகணேசன் பத்மினி**

பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்





வருகிற மகாசிவராத்திரியன்று விசேட பூசைகளும் நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.


**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30மணி
எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
நடித்த
**பெற்றால்தான் பிள்ளையா**
இத்துடன் சென்னையில் நடைபெற்ற 2-வது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாடும் கலரில் காண்பிக்கப்படும்.



**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
பிரீ போயா, போயா 4காட்சிகள்
என். டி. ராமராவ்
நடித்த
**அபூர்வ பிறவிகள்**



**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30 9-30
பிரிப்போயா, போயா 2-30 மணி
சிவாஜி கணேசன்
நடித்த
**குழந்தைகள் கண்ட குடியரசு**



வல்வெட்டித்துறை
**றஞ்சனு தியேட்டர்**
தினசரி: 6-30, 9-30
நாகேஸ்வரா வைஜந்தி
நடித்த
**அதிசயப் பெண்**



**MANOHARA**
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
HELGA
The most revealing Sex ebucaiton Film ever released!
(Strictly for adults only)
கருவுற்பத்தி முதல் பிரசவம் வரையில் இதுவரை திரைக்கு அனுமதிக்கப்படாத பல சம்பவங்களை புதிய சாதனைக் கருவிமூலப் வெளிப்படுத்திக் காட்டும் பிரசவ சித்திரம்.
**ஹெல்கா**
(கட்டாயமாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)



**REGAL** JAFFNA
Daily 4-15, 7 & 9-45 p m
Poya, Prepoya 4 Shows
Tony Franciosa
and Anjanette Comer
in
IN ENEMY COUNTRY
(Technicolor)


விட்டுக் கொண்டுநிற்கையில் பொலிசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதாகவும் வரை றிமாண்டில் வைக்கும்படி நீதிபதியால் உத்தரவிடப்பட்டது.

## "சகலருக்கும் கோயிலை திறந்து விடுங்கள்"

கைதடி, திங்கள்

கைதடியிலுள்ள ஆலயங்களும் இம்முறை சகல மக்களுக்கும் திறந்து விடப்படுமென்பதை தெரிவிக்க விரும்புகிறேன். நீங்கள் ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாகத்தான் இருப்பீர்களென நம்புகிறேன். ஆதலால் தேர்தல் நெருங்கி வரும் இவ்வேளையில் கட்சிக் கொள்கையை நிலைநாட்ட சகலருக்கும் பேதமின்றி ஆலயங்களைத் திறந்துவிடுங்கள்

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் புதிய மனேஜராக நேற்று பொறுப்பேற்ற திரு. வி. சிவகுருவிற்கு கைதடி சிறுபான்மைத் தமிழர் சார்பில் முன்னாள் கைதடி கிராமசபை உறுப்பினர் திரு. பொன். செல்லையா விடுத்துள்ள வேண்டுகோளில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த வேண்டுகோளில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:- கடந்த ஆண்டு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினர் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசத்திற்குஎங்கள் ஆதரவைத் தரும்படி கோரினுர்கள். அவர்கள் வன்முறையில் ஈடுபடப் போகிறுர்கள என்பதை அறிந்து ஆதரவைக் கொடுக்கவில்லை. இம்முறை அவர்கள் சமரசமான முறையில் இப்பிரச்னைக்கு தீர்வுகாண முன்வந்திருக்கின்றனர். ஆதலால் இம்முறை சமாதானமாக சகலருக்கும் ஆலயத்தைத் திறந்துவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

— —

## பண்டிதர் கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்.

''விழாக்காலங்களில் மக்களின் கடற் போக்குவரத்தை முறையாகக் கட்டுப்படுத்தி நடத்தினுல் நயினுதீவு, பாலைதீவு கடல் விபத்து என்பனவற்றைத் தடுத்திருக்கலாம். இப்போது கச்சதீவிற்கு செல்வோருக்கும் விபத்துகள் ஏற்படாமல் தடுக்க அவர்களின் கடற் பயணத்தை கட்டுப்பாடாக நடாத்த நடவடிக்கை எடுக்குக.''

யாழ். பொலிஸ் அதிபருக்கும், யாழ். மாவட்ட அரசாங்கஅதிபருக்கும் அனுப்பியுள்ள தந்தியில் கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் கேட்டுள்ளார்.

## வரவேற்பளிப்பர்

கோப்பாய், திங்கள்

கோப்பாய் கிராமசபையின் புதிய உபதலைவரும் 5ம் வட்டார அங்கத்தவருமான திரு. ஆ. தம்புவுக்கு கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலையத்தினர் பொது வரவேற்பளிக்க முடிவு செய்துள்ளனர்.

ளார்கள்.

எதிர்வரும் சிவராத்திரி விழாவில் கதாகாலட்சேபம் செய்யும்பொருட்டு ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் இப்போது ராமேஸ்வரம் சென்றுள்ளார். ராமேஸ்வரத்திலிருந்து சுவாமிகள் இந்தோனேஷியா செல்வார்.

— —

## நியமனம்

வேலணை, திங்கள்

ஐக்கிய பண்டகசாலையின் வேலணை ஆலம்புலம் டிப்போவுக்கு நிர்வாகப்பொறுப்பதிகாரியாக திரு. ப. சிவரெத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்னை உற்பத்தியாளர் சங்கப்பொதுக்கூட்ட மொன்று கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் அ. பேரம்பலம் தலைவராகவும், திரு. செ. சதாசிவம் செயலாளராகவும் திரு. அ. சண்முகம் தனுதிகாரியாகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். தபால் விநியோகம், கோக்குவரத்து வசதிகள், வெட்டப்படாத காடுகள் பற்றியவை, நெற்காணி பெறுதல் என்பனவும் வேறு பலவும் பற்றி ஆராயப்பட்டு விரைவில்நடவடிக்கைஎடுக்க வேண்டுமென சபை தீர்மானித்தது.


வதிலும் 75,000 தம்பதிகள் குடும்பத் திட்ட முறைகளைக் கடைப்பிடித்து சந்தோஷமாக வாழ்கின்றனர். உங்களுக்கும் குடும்பத்திட்ட ஆலோசனைகளும், முறைகளும் தேவைப்பட்டால் அருகிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிக்கு சென்று விசாரியுங்கள். அல்லது இரகசியமான பதிலைப்பெற எமக்கு எழுதுங்கள்.

**குடும்பத்திட்ட தகவல்**
457, காலி வீதி,
கொள்ளுப்பிட்டி.



# 10,000


அதிகமான

# மசி-பேர்குசன்

## ட்ராக்டர்கள், நாடெங்கிலும் தகுசிறந்த சேவை வசதி கொண்டவை

நாடெங்குமுள்ள இருபத்திநான்கு விநியோகஸ்தர் மூலம் 10,000 மசி-பேர்குசன் ட்ராக்டர்கள் கவனம் பெற்று, பதில் உறுப்புகள், ரூ. 10 கோடி பெறுமானம் பின் கொண்டு செயலாற்றுகின்றன

அலவ்வ — விவசாய இயந்திர பொறிவளாளர்
அலுபோமுல்ல — ட்ராக்டர், கார் சேவை ஸ்தாபனம்
அம்பலாந்தொட்டை — 'ரிலையபில்', மோட்டார் ட்ராக்டர் என்ஜினியர்ஸ்
அம்பாரை — பிரவுண் அன் கம்பனி லிமிட்
அனுராதபுரம் — டி. எஸ். குணசேகர அன்சன்ஸ்
பதுளை — சென்றல் மோட்டர்ஸ்
மட்டக்களப்பு — கீழ்மாகாண் விவசாய கூட்டுறவுச் சங்கம் லிமிட்
புத்தளம் — சென்றல் மோட்டர்ஸ்
ஹட்டன் — ஹட்டன் போக்குவரத்து சக ஏஜன்சி கம்பனி லிமிட்
ஹிங்குராக்கொட — த. அக்ரிகொலா
கட்டுகஸ்தோட்டை — பிரவுண் அன் கம்பனி லிமிட்
காரைதிவு — கீழ்-மாகாண விவசாய கூட்டுறவுச் சங்கம் லிமிட்



கொச்சிக்கடை — மோட்டார் அன் ட்ராக்டர் என்ஜினியர்ஸ் லிமிட
குருநாகலை — [illegible] அன் கம்பனி லிமிட
மாத்தறை — த. றிலையபில் மோட்டார் தொழிற்சாலை
முல்லைத்தீவு — ஸ்டான்டர்ட் என்ஜினியரிங் வேர்க்ஸ்
நிக்கரவட்டிய — ''ஃபாமர்ஸ்''
பாலாவி — தி அக்ரிகோலா
பரந்தன் — பிரவுண் அன் கம்பனி லிமிட்
திருக்கதீஸ்வரம் — திருக்கதீஸ்வரம் என்டபிரைசஸ்
திச்சமஹாரகம — றிலையபில், மோட்டர் அன் ட்ராக்டர் என்ஜினியர்ஸ்
திருகோணமலை — குயிக் பிளவ்ஸ் (ஆர் அன்பீ) லிமிட்
வவுனியா — பிரவுண் அன் கம்பனி லிமிட
வேரகன்தொட்ட — மெடரட் டீலர்ஸ்

**பிரவுண் அன் கொம்பெனி லிமிட்டேட்**
விவசாயப் பிரிவு,
தேவநம்பியதீசன் வீதி, கொழும்பு 10.
டெலிபோன் 93097.

422 849



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் குண்டுவீச்சில் 32 அரபுக்கள் பலி

## எகிப்தியரின் தாக்குதலுக்கு யூதர்களின் பதிலடி

கெய்ரோ, மார்ச். 2

**சூயஸ்கால்வாயின் குறுக்கே நேற்று இஸ்ரேலியர் அரபுநிலைகள் மீது நடத்திய விமானத்தாக்குதலின் காரணமாக 32 பேர் பலியாகியிருக்கிறார்கள்.**

**நேற்றுமுன்தினம் இஸ்ரேல் நிலைகள் மீது ஐக்கியஅரபுக்குடியரசு விமானங்கள் நடத்திய கடும் தாக்குதல்களைத் தொடர்ந்து இஸ்ரேலியர் நேற்று புதிய தாக்குதல்களை நடத்தியிருக்கிறார்கள்.**

சூயஸ் கால்வாயின் குறுக்கே இரு முனைகளில் இஸ்ரேலிய விமானங்கள் அலை அலையாகப் பறந்துவந்து சரமாரியாகக் குண்டுகளை வீசியதாகவும் இதில் சாதாரண மக்களும் சிப்பாய்களும் உட்பட 32 பேர் கொல்லப்பட்டதாகவும் ஐக்கிய அரபுக்குடியரசு அறிவித்தது.

மூன்று வாரங்களில் இஸ்ரேலியரால் நடத்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதல் இதுவாகும்.

கடந்த மாதம் 12-ம் திகதி கெய்ரோவுக்கருகில் உருக்கு ஆலையொன்றின் மீது இஸ்ரேலியர் நடத்திய விமானத் தாக்குதல்களில் 70 அரபுத்தொழிலாளர்கள் கொல்லப்பட்டது தெரிந்ததே. அச்சம்பவத்திற்குப் பின்னர் இப்பொழுது மீண்டும் இஸ்ரேலியர் படுமோசமான தாக்குதல் ஒன்றினை நடத்தி 32 பேரைப் பலியாக்கியிருக்கிறார்கள்.

இஸ்ரேலியர் சூயஸ்கால்வாயின் குறுக்கே மத்திய பகுதியிலும், தெற்குப் பகுதிகளிலும் தாக்குதல்களை நடத்தியதாக அரபுக்கள் தெரிவித்தனர்

அரபு நிலைகள் மீது சிறிய அளவில் மூன்று தடவைகள் தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேலியர் அறிவித்துள்ளனர்.

## ஆஸ்ட்ரியா பொதுத் தேர்தல்: சோஷலிஸ் கட்சி வெற்றி

வியன்னா, மார்ச் 2

ஆஸ்ட்ரியாவில் நேற்று இடம்பெற்ற பொதுத்தேர்தலில் சோஷலிஸக் கட்சி பெரும்பான்மை பலம்பெற்றிருக்கின்றது. என்றாலும் ஆட்சியைத்தனித்து அமைக்கும் அளவுக்கு இக் கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை.

165 பிரதிநிதிகளைக் கொண்ட சட்டசபைக்கு சோஷலிஸ்ட் கட்சி 81இடங்களில் வெற்றி பெற்றிருக்கின்றது. இதுவரை ஆட்சியிலிருந்து வந்துள்ள கென்சர்வேடிவ் கிறிஸ்தவ ஜனநாயக கட்சிக்கு 78 இடங்களில்வெற்றி கிடைத்துள்ளது. லிபரல் கட்சியினர் 6 இடங்களில் வெற்றிபெற்றிருக்கின்றனர். கம்யூனிஸ்ட்களுக்கு ஒரு சத வீத வாக்குகளே கிடைத்துள்ளது.

சோஷலிஸ்ட் கட்சி பதவியிலிருந்து விலகும் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியுடன் சேர்ந்து கூட்டாட்சி நடத்த விரும்புவதாக அதன் தலைவர் அறிவித்திருக்கிறார்.

## ரொடீஷியா குடியரசாகப் பிரகடனம்

### பாரதி தாஸனுக்கு இலக்கியப்பரிசு

சென்னை, மார்ச் 2

மறைந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாஸனுக்கு சாகித்ய அகடமி பரிசு கிடைத்திருக்கிறது.

பாரதிதாஸன் என்புறனை பெயர் கொண்ட திருகனகசுப்புரத்தினம் அவர்கள்எழுதிய 'பிசிராந்தையார்' என்ற நூலுக்கு 1969-ம் ஆண்டுக்கான இலக்கியப் பரிசு வழங்கப்பட்டிருக்கின்றது. பரிசுத் தொகையாக ரூ.5000 வழங்கப்படும்.

### பெண் டாக்டர் செய்த தியாகம்

அலகபாத், மார்ச் 2

சாகக்கிடந்த நோயாளி ஒருவருக்கு தாமே இரத்த தானம் கொடுத்து உயிரைக் காப்பாற்றியுள்ளார் பெண் டாக்டர் ஒருவர்.

அலகபாத்தில் உள்ள காலஞ்சென்ற பிரதமர் நேருவின் துணைவியார் கமலாநேருவின் பெயரிலான ஆஸ்பத்திரியில் இந்த உருக்கமான சம்பவம் இடம் பெற்றுள்ளது. இந்த ஆஸ்பத்திரியில் இரத்தத்தட்டுப்பாடு ஏற்பட்டு ஒருநோயாளி இறக்கும் நிலை ஏற்பட்டது. உடனே அங்கிருந்த பெண் டாக்டர் தமக்கே இரத்த சோகை இருந்தபோதிலும் இரத்ததானம் செய்து அந்த நோயாளியைக் காப்பாற்றியிருக்கிறார்.

### கம். முகாம் பிடிபட்டது

பாங்கொக், மார்ச். 2

மலேஷியாவுடனான எல்லைப் பகுதியில் தாய்லாந்து ராணுவத்தினர் கம்யூனிஸ்டுகளின் இரகசிய முகாம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

மலேஷியாவிலிருந்து வெளியேறிய கம்யூனிஸ்ட் தலைவர் ஒருவர் இந்த முகாமைத் தமது தலைமைக் காரியாலயமாக உபயோகித்து வந்தாராம்.

### சந்திரமண்

### காக்காய்

# பிரிட்டனில் தஞ்சம் கோரலாம்

லண்டன். மார்ச் 2

காமன்வெல்த் பிரஜைகள் இனி பிரிட்டனில் அரசியல் தஞ்சம் பெறுவதற்கு உரிமை பெறுகின்றனர்.

திருத்தப்பட்டுள்ள குடியேற்றக்கட்டுப்பாடு விதிகளில்இவ்வுரிமை முதற்தடவையாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் அரசின் கொள்கைகளைத் தெரிவிக்கும் பத்திரிகைகளில் திருத்தப்பட்ட குடியேற்றக் கட்டுப்பாட்டு விதிகள் வெளியிடப்பட்டுள்ளன(

## பிரஞ்சு அதிபர் பொம்பிடோவுக்கு நியுயோர்க்கிலும் எதிர்ப்பு

### வரவேற்புக்கு மேயர் வரவில்லை

நியுயோர்க், மார்ச் 2

பிரஞ்சு அதிபர் பொம்பிடோவுக்கு எதிராக மேலும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. நேற்று சிக்காகோவிலிருந்து அதிபர் பொம்பிடோ நியுயார்க் வந்து சேர்ந்த பொழுது சுமார் ஆயிரத்து ஐநூறு யூதர்கள் அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

அதிபர் பொம்பிடோ சிக்காகோ சென்றபொழுது அங்கு பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

சிக்காகோவிலிருந்து நியுயோர்க் வந்து சேர்ந்த பொழுது மிக மோசமாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டக்காரர்கள் திரு. பொம்பிடோவைக் கேலியும் கிண்டலும் செய்தார்கள்.

விமான நிலையத்தில் அதிபரை வரவேற்க மேயர் உட்படப் பல பிரமுகர்ள வந்திருக்கவில்லை. இந்த ஆர்ப்பாட்டங்கள அமெரிக்காவின் முகத்தில் கரி பூசிவிட்டதாக அதிபர் பொம்பிடோ குறிப்பிட்டார்.

ஆர்ப்பாட்டங்களின் காரணமாக திரு. பொம்பிடோவும் அவரது துணைவியாரும் தமது பிரயாணத்தைக் குறைத்துக்கொண்டு நாடு திரும்பி விடக்கூடும் என்று குறிப்பிடடபோதிலும், அவ்வாறு நடைபெறுதென்று அறிவிக்கப்பட்டது நியுயோர்க்கிலுள்ள பிரஞ்சு கான்சல் ஜெனரல் காரியாலயத்திலும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

பிரான்ஸ் மேற்காஸிய விஷயத்தில் கடைப்பிடிக்கும் கொள்கைக்கு அமெரிக்காவில் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றது. லிபியாவுக்கு மிராஜ் ஜெட் சண்டை விமானங்களைக் கொடுப்பதற்கு பிரான்ஸ் முடிவுசெய்திருப்பதை ஆட்சேபித்து அமெரிக்காவிலுள்ள யூதர்கள் ஆர்ப்பாட்டங்கள் நடத்துகிறார்கள்.

அதிபர் பொம்பிடோ இன்று வாஷிங்டன் சென்று ஐ நா. பொதுச் செயலாளர் யுதாண்டை சந்தித்து மேற்காஸிய நிலைகள் குறித்து ஆலோசனைகள் நடத்தவிருக்கிறார் வாஷிங்டனிலும் பொம்பிடோவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் என்றுதெரிகின்றது

பொம்பிடோ நேற்று சிக்காகோ சென்றபோது அங்குள்ள யூதர்களும் இஸ்ரேல் ஆதரவாளர்களும் ஆயிரக்கணக்கில் கூடி கேலியும் கிண்டலும் செய்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டார்கள். பொம்பிடோவுக்கும் அவரது துணைவியாருக்குமென ஒழுங்குசெய்யப்பட்டிருந்த விருந்துக்கு அவர்கள் சென்றபோது, ''பூ பூ பொம்பிடோ'' 'தொலைந்து போ பொம்பிடோ' என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கூச்சலிட்டார்கள். பொலிசார் பொம்பிடோ தம்பதிகளை வளைத்து நின்று பாதுகாப்பாக ஒட்டலுக்கு அழைத்துச் சென்றார்கள்.

# செய்திச் சுருக்கம்

தமிழாசிரியர் சங்கம் தமிழ்மொழி ஆசிரியர்களை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவென ஒரு கமிட்டியைத் தெரிவுசெய்துள்ளது.

### விண்ணப்பம்

### கட்டாக்காலிகள் தொல்லை

கோப்பாய், திங்கள்

கடந்தசிலநாட்களாகக்கட்டாக்காலிமாடுகள் இப்பகுதி விவசாயிகளுக்குத் தொல்லை



யாழ். சமுத்திரா றேடஸ் லிமிடெட்டில் ஜெர்மனியிலிருந்து வருவிக்கப்படும் 'பொஸ்' மின்சார உபகரணங்கள், யந்திரங்களை டீசல் அன் மோட்டார் என்ஜினியரிங் லிமிட்டெட் நிர்வாக டைரக்டர் திரு. டேம்ஸ் வில்லேர்ஸ் ஆரம்பித்துவைக்கிறார்.

# கிரி தேர்தல் வழக்கு:

## சஞ்சீவரெட்டி சாட்சியம்

புதுடில்லி, மார்ச். 2

''எனனுடைய அரசியல் எதிரிகள் அல்லது என்னுடன் தேர்தலில் போட்டியிட்ட திரு. கிரி அல்லது அவரை ஆதரித்த பிரதமர் இந்திராகாந்தி இவர்களைத் தவிர வேறுயாரும் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டதற்குப் பொறுப்பாக இருக்க முடியாது''

திரு வி. வி. கிரி தேர்தல் ஆட்சேபனை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது முன்னாள் சபாநாயகரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தோற்றவருமான திரு. சஞ்சீவரெட்டி வாக்குமூலம் அளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார். தன்னை ''ஒழுங்கற்ற'' வர் என்று குறிப்பிட்டு, ஆட்சிமன்றத்தில் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தைபற்றி கூறுகையிலேயே அவர் இவ்விதம் குறிப்பிட்டார்.

துண்டுப்பிரசுரத்தில் சுமத்தப்பட்டிருந்த ஒவ்வொரு குற்றச்சாட்டையும் அவர் மறுத்தார். தேர்தல் பிரசார சமயத்தில் வாக்காளர்களிடையே தன்மீது துவேஷத்தை உண்டுபண்ணவும் தன்னை அவதூறு செய்யவுமே ஆபத்தான துண்டுப் பிரசு

தப்தாரி ''துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டதற்காக ஆட்சேபனைசெய்யும் பொருட்டு நீங்கள் பிரதமரைச் சந்தித்தீர்களா'' என்று திரு. ரெட்டியிடம் கேட்டதற்கு 'நான் பிரதமரை சந்திப்பதற்காக செல்லவில்லை எனக்கு எதிராகவும் திரு. கிரிக்கு ஆதரவாகவும் பிரதமர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பது எனக்கு அப்போது நிச்சயமாகத் தெரிந்துவிட்டது' என்று பதிலளித்தார்.

திரு. தாப்தாரி: அது ஓர் ஆபாசமான துண்டுப் பிரசுரமல்லவா?

திரு. ரெட்டி: அதைவிட மோசமானதாக எதுவும் இருக்கமுடியாது.

திரு. தாப்தாரி: திரு. கிரியின் உதவியுடன் அவருடைய ஆதரவாளர்கள் இத்துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டிருக்கவேண்டும் என்று கருதுகிறீர்களா?

திரு. ரெட்டி: அது யூகமாகத்தான் இருக்கமுடியும். ஆனல் அவருடைய ஆதரவாளர்கள் துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டிருப்பதாகச் சொல்லமுடியும்.

மற்றொருகேள்விக்குதிரு. சஞ்சீவரெட்டி பதிலளிக்கையில் அபேட்சாபத்திர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொடீஷியா குடியரசாகப் பிரகடனம்

சாலிஸ்பரி, மார்ச்.2

ரொடீஷியா இன்று அதிகாலையில் குடியரசாகப் பிரகடனம் செய்து கொண்டது இந்தப்பிரகடனத்தில் சட்ட விரோத ஆட்சியாளர் ஐயான்ஸ்மித்தும் இதுவரை ஆட்சி நிர்வாகங்களுக்குப் பொறுப்பாய் இருந்த கிளிபோர்ட்டீயூபோன்டும் கைச்சாத்திட்டனர்.

குடியரசுப் பிரகடனத்தை தொடர்ந்து திரு. கிளிபோர்ட்டியூபோன்ட் தற்காலிக அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

ரொடீஷியா 1965ம்ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்த தன்னை சட்ட விரோதமாகவிடுவித்துக் கொண்டு சுதந்திர பிரகடனம் செய்தது. இதனை பிரிட்டன் முதல் பலநாடுகள் கண்டித்தன, திரு. ஐயான்ஸ்மித்தின் ஆட்சி சட்ட விரோதம் என பிரிட்டன் அறிவித்தது

இப்பொழுது ரொடீஷியா தனது பழைய ஆட்சிமுறையைரத்து செய்து விட்டு குடியரசாகப் பிரகடனப் படுத்திக் கொண்டுள்ளது. புதிய குடியரசுக்கான தேர்தல் அடுத்த ஏப்ரல் மாதம் நடை பெறும்.

ரொடீஷியா குடியரசாகப் பிரகடனப்படுத்திக் கொண்டதின் மூலம் பிரிட்டனுடனுன தனது சகல விதமான தொடர்புகளையும் துண்டித்துக் கொண்டுளளது ரொடீஷியா சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்டது போலவே குடியரசாகப் பிரகடனம் செய்து கொண்டதையும் பிரிட்டன் சட்ட விரோத நடவடிக்கை என்று கண்டித்திருக்கின்றது.

இதற்கிடையில் ஆபிரிக்க நாடுகள் பலவும் ரொடீஷியாவில் பெரும்பான்மை மக்களைப் புறக்கணித்துவிட்டு சிறுபான்மையினரானவெள்ளையர்கள ஆடசி நடத்துவதைக் கண்டித்திருக்கின்றன.

அடிஸ்அபாபாவில் கூடிய ஆபிரிக்க நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களரொடீஷியாவுக்கு எதிராக பலாத்காரம் பிரயோகிக்க வேண்டும் என்றும் பொருளாதார நிர்ப்பந்தங்களைபலப்படுத்த வேண்டுமென்றும் தீர்மானித்திருககின்றன.

— —

## விமானத்தில் வெடிகுண்டு

ரோம், மார்ச் 2

ரோம் விமான நிலையத்தில் எதியோப்பிய விமானமொன்றிலிருந்து குறித்த காலத்தில் வெடிக்கும் குண்டுஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

விமானம் புறப்படுவதற்காக தளத்தில்ஓடிக் கொண்டிருக்கையில் விமான மலசலகூடத்தில் இந்தக் குண்டை விமான காவல்படையைச் சேர்ந்த ஒருவர் கண்டுபிடித்தார். உடனடியாக விமானம் நிறுத்தப்பட்டது. குண்டு வெடிக்குமுன்னதாக அது வெளியில் கொண்டுவரப்பட்டது.

விமான நிலயத்தில்உடனடியாக அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப் பட்டது இந்தக் குண்டைவிமானத்தில் வைத்தவர் யார் என்பதை கண்டு பிடிப்பதில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் எதியோப்பியாவில் செயல்படும் விடுதலை இயக்கமொன்றின் உறுப்பினர்களுக்கும் இதற்கும் சம்பந்தமிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

அமெரிக்காவின்

## சூரிய கிரகண ஆராய்ச்சி

வாஷிங்டன். மார்ச் 2

அடுத்தசனிக்கிழமை நிகழவிருக்கும் சூரிய கிரகணத்தின்போது விண்வெளி ஆராய்ச்சிகளை அமெரிக்கா மேற்கொள்கிறது. ஆறுசெய்மதிகள் பூமியை வலம்வந்து சூரிய கிரகணத்தின்போது நிகழ்வனவற்றை சமிக்ஞை மூலம் தெரியப்படுத்தும்.

———

## நேபாள மன்னருக்கு கிரி வரவேற்பு

காட்மாண்ட், மார்ச் 2

நேபாள பட்டத்து இளவரசர் வீரேந்திராவின் திருமணத்திற்குச் சென்றிருந்த இந்திய ஜனதிபதி நேபாள தூதரகத்தில் நேபாள மன்னரை வரவேற்ருர்.

இந்த வரவேற்பின்போது லாவோஸ் மன்னர், இலங்கை கவர்னர் ஜெனரல் வில்லியம் கோபல்லவா உட்பட 3000க்கு மேற்பட்டவர் இந்த வைபவத்தில் பங்குபற்றினர்.

## சந்திரமண் திருட்டு

நியூயோர்க், மார்ச். 2

சந்திரனிலிருந்து கொண்டு வரப்பட்ட மண் மாதிரிகளில் ஒரு சிறுபகுதி காணுமல் போய் இருக்கின்றது. லொஸ் ஏஞ்சல்சில்இந்த மண் மாதிரி காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த போது காணுமற்போனதாகத் தெரிகின்றது.

அப்பல்லோ-11 வீரர்களால் கொண்டு வரப்பட்ட இந்த சந்திரப் புழுதி கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக்காகப் பயன்படுத்தப் பட்டுவந்தது. இதையாரும் திருடியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது. பொலிசார் இத் திருட்டைக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## பலாத்கார வழக்கில் தீர்ப்பு

காலி, திங்கள்

மைத்துனியைப் பலாத்காரம் செய்ததாக இரு குற்றச்சாட்டுகள்மீது விசாரணை செய்யப்பட்ட எதிரிக்கு முதல் குற்றச்சாட்டில் 2 வருடச் சிறையும், 2வது குற்றச்சாட்டில் ரூ. 2,500 அபராதமும் விதிக்கப்பட்டது.

காலி அசைஸ் நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைசெய்யப்பட்டது. இவ்வழக்கில் எம். எஸ். குணதாச என்ற திருமணமான நபர், கருணுசிலி என்ற 20 வயது மைத்துனியை 1967 மார்ச் 20ந் தேதி பலாத்காரம் செய்ததாகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தது.

நீதியரசர் கிறெஸ்ரர் தீர்ப்புவழங்கினுர்.

— —

## அருணகிரிநாதர் விழா

நாவலப்பிட்டி. திங்கள்

நாவலப்பிட்டி ஸ்ரீமுத்து மாரியம்பாள் தேவஸ்தான கஜலட்சுமி மண்டபத்தில் திரு. டி பி. கிருஷ்ணசாமிதலைமையில் அருணகிரிநாதர் விழா கொண்டாடப்பட்டது வித்துவான் ப. வடிவேற்பிள்ளை, டாக்டர் எஸ் மணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திருப்புகழ் கச்சேரியும் நடைபெற்றது.

...தலைவர் ஒருவர் இந்த முகாமைத் தமது தலைமைக் காரியாலயமாக உபயோகித்து வந்தாராம்.

## காக்காய் வலிப்புக்கு பலி

யாழ்ப்பாணம், செவ்

பிச்சை எடுத்துச் சீவியத்தை நடாத்தியவர் காக்காய் வலிப்புக்குப் பலியானுர் யாழ் தபால்நிலையக் கட்டடத்தில் இறந்து கிடந்த நல்லையா தம்பிராசா (32வயது) என்பவரின் மரணவிசாரணையில் மேற்படி விபரம் தெரியவந்தது இவரது மரணவிசாரணையை யாழ். நகர மரணவிசாரணை அதிகாரி திரு. என். ராசநாயகம் நடாத்திஞர். காக்காய் வலிப்பினுல் இம்மரணம் ஏற்பட்டதாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

0 0 0

பாலைதீவுக் கடலில் குளித்துக்கொண்டிருந்த கரையூரைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் காக்காய் வலிப்புக்குப் பலியானுர். பாலைதீவு அர்ச். அந்தோனியார்கோவிலுக்குச் சென்றிருந்த போதே இச்சம்பவம் நடைபெற்றது. காக்காய் வலிப்பினுல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. இச்சம்பவம் படகு விபத்து நடப்பதற்குச் சில மணி நேரம் முன்னதாகவே நடைபெற்றது. (தே.நி)

... ...

## 'குடியானவரின் கடமை'

சுழிபுரம், திங்கள்

'காலத்தோடு கருத்தமைந்து வாழ்வதே வாழ்க்கை. நாட்டின் நல்வாழ்வில் கவனம் செலுத்துவது ஒவ்வோர் குடியானவனின் கடமையாகும். நோயற்ற வாழ்வும், திட்டமிடப்பட்ட குடும்ப நலமும் பேணிக்காக்கப்பட வேண்டியவையாகும். கிராமப் புறங்களில் வாழும் மக்கள் நகரப்புறத்தவர்களுக்கு குடும்பநலத் திட்டத்தில் வழிகாட்டியாகஅமைய வேண்டும். நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் அளவான குழந்தைகளைப் பெற்றுக்கொளவதும், நல்ல உணவுகளை உட கொண்டு சுகதேகிகளாக வாழவும் பழகிக் கொளள வேண்டும்''

இவ்வாறு சுழிபுரம் கலைமகள் சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட சுகாதார கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய சுகாதார போதனுசிரியர் திரு. ஏ. வைத்தீஸ்வரன் பேசுகையில் குறிப்பிட்டார்.

தமிழாசிரியர் சங்கம் தமிழ்மொழி ஆசிரியர்களை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவென ஒரு கமிட்டியைத் தெரிவுசெய்துள்ளது.

### விண்ணப்பம்

இலங்கை இராணுவத்தில் உள்ள 150 காலியான இடங்களுக்கு 10,000 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

### திறந்துவைத்தார்

எருக்கலம்பிட்டி புதிய வாசிகசாலையை மன்னுர் அரசாங்க அதிபர் திரு. எஸ். கதிர்காமநாதன் திறந்துவைத்தார்.

### இந்தியா திரும்பியுள்ளனர்

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் கீழ் 1969ம் வருடம் செப்டெம்பர் மாதத்திற்குள்ளாக 3006பேர் இந்தியா திரும்பியுள்ளனர். நேற்று முன்தினம் சனப்பிரதிநிதிகள் சபையில் பிரதமர் இத்தகவலைத் தெரிவித்தார்.

### 25 லட்சம் ரூபா ஒதுக்கீடு

கிராம அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்குத்தேவையான பொருட்களை வாங்கி உள்ளூராட்சி மன்றத்திற்கு வழங்குவதற்காக அரசாங்கம் 25 லட்சம் ரூபா வெளிநாட்டு நாணய மாற்றினை ஒதுக்கியுள்ளது. இதன்கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் இரத்மலானையில் அமைக்கப்பட்டுள்ள புதிய களஞ்சியச் சாலையில் வைக்கப்பட்டுத் தேவை போல உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படும்.

### நியமனம்

அரசாங்க சேவைக் கமிஷன் ஆறு தமிழர்களை முதலாந்தர அதிபர்களாகத் தெரிவுசெய்துள்ளதாக அறியப்படுகிறது. இவர்களுக்கு மார்ச் மாதம் 1ந் திகதி தொடக்கம் நியமனம் வழங்கப்படும்.

### அமுல் நடத்த உயர் கமிட்டி

உத்தேச மாற்றுப் பயிர்த் திட்டத்தை அமுல்செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உயர் கமிட்டியொன்றை அரசாங்கம் நிறுவியுள்ளது.

### வழக்கு கட்டுப்பணத் தொகை அதிகரிப்பு

அதிகமான தேர்தல் வழக்குகள் தாக்கல்செய்யப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்காக வழக்குக் கட்டுப் பணத் தொகையை அதிகரித்துள்ளதாக நீதியமைச்சர் திரு. விஜேமன்ன தெரிவித்தார்.

## கட்டாக்காலிகள் தொல்லை

கோப்பாய், திங்கள்

கடந்தசிலநாட்களாகக்கட்டாக்காலிமாடுகள் இப்பகுதி விவசாயிகளுக்குத் தொல்லை கொடுத்து வருகின்றன. தோட்டங்களில் இவை புகுந்து பயிர்களை நாசமாக்குகின்றனவாம். இது குறித்து கோப்பாய் கி. ச .தலைவர் திரு. தி. பரமானந்தராசாவுக்குப்புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## இடமாற்றம்

சுழிபுரம், திங்

பணிப்புலம்காலையடி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர் க, கனகசபை இம் மாதம் முதல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## கச்சதீவு படகுகளுக்கு அனுமதிச்சீட்டு

அனுமதிச்சீட்டுப் பத்திரம் பெற்றபடகுகளே கச்சதீவுக்கு பிரயாணிகளை ஏற்றிச் செல்லாமென்று மாவட்ட அரசாங்க அதிபர் திரு. பிரான்ஸிஸ் பீட்டர்ஸ் அறிவிக்கிருர்.

குற்றச்சாட்டையும் அவர் மறுததார். தேர்தல் பிரசார சமயததில் வாக்காளர்களிடையே தன்மீது துவேஷத்தை உண்டுபண்ணவும் தன்னைஅவதூறு செய்யவுமே ஆபத்தான துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டதாக திரு. சஞ்சீவரெட்டி கூறினுர்

''எனது அரசியல் எதிரிகளுககு தவிர வேறுயாருககு இம்மாதிரியான துண்டுப் பிரசுரம் வெளியிடுவதில் சிரத்தை இருகக முடியும்'' என்று குறுக்குவிசாரணையின் போது திரு. ரெட்டி தெரிவித்தர்.

துண்டுப் பிரசுரத்தை படித்தபின்பு நீங்கள் என்ன நினைத்தீர்கள என்று அவரிடம் கேட்கப்படட கேளவியொன்றுக்கு ''விடயங்கள் இவ்வளவு மட்டமாகிவிட்டது பற்றி மனம் வருந்தினேன்'' என்று பதிலளித்தார்.

துண்டுப்பிரசுரத்தில் அடங்கிய குற்றச் சாட்டுக்களை ஏன் மறுக்கவில்லை என்று அவரிடம் கேட்கப்பட்ட மற்ருெரு கேள்விகருப் பதிலளிக்கையில் ''விஷயத்தை அனுவசியமாக நீட்டிக் கொண்டுபோய் பிரசாரத்திற்கு இடம்கொடுக்க நான் விரும்பவில்லை'' என்று கூறினுர்.

திரு. கிரியின் சார்பாக ஆஜரான வழக்கறிஞர் திரு. ஆனுல் அவருடைய ஆதரவாளர்கள் துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டிருப்பதாகச் சொல்லமுடியும்.

மற்ருெருகேள்விக்குதிரு. சஞ்சீவரெட்டி பதிலளிக்கையில் அபேட்சாபத்திரத்தை வாபஸ் பெறுவதற்கு இன்னும் நாலு தினங்கள் இருநததால் போட்டியிடுவதிலிருந்துவிலகி கருத்துவேற்றுமைகளைத் தீர்த்துக்கொளளலாமென்ற எண்ணத்துடன் நான் பிரதமர் இந்திராவை சந்தித்திருந்தேன் அவர் ஜனதிபதி தேர்தலில் என்னை ஆதரிப்பதாகவும் ஆகவே நான் வாபஸ்பெறும் விஷயமே எழவில்லையென்றும் உறுதி கூறினுர் என்று கூறினுர்.

———

யாழ்ப்பாணம், செவ்.

மாலைதீவுக்கடலில் விபத்துக்குள்ளான படகில் 80 பேர் பிரயாணம் செய்ததாக அந்தப்படகில் பிரயாணம்செய்து உயிர்தப்பிய வேலணையைச் சேர்ந்த சின்னத்துரை சந்திரசேகரம் மரண விசாரணையின்போது சாட்சியமளிக்கையில் தெரிவித்தார். படகுக்காரர் பணம்வாங்கும்போது கணக்குப்பார்த்ததிலிருந்து 80 பேர் அந்தப்படகில் பிரயாணம் செய்தது தமக்குத் தெரியவந்ததென்றும் அவர் சொன்னுர்.


உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு நீங்கள் செலுத்தும் பரிபூரண அஞ்சலி

0231

ஏ. எவ். ரேமண்ட்ஸ்

ஈமக் கிரியை ஏற்பாடுகள்


புகழ் வாய்ந்த, மரியாதையான, பாதுகாப்பான ஈமக் கிரியைச் சேவை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கிடைக்கிறது.

147, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சுண்டிக்குளி சந்தியிலிருந்து 50 யார் தூரம்)

- இரவு பகல் எந்நேரமும் கிடைக்கும் சேவை.
- பண வசதிக்கு ஏற்ற பிரேதப் பெட்டிகள்.
- நவீன பாடை வாகனம்.
- பூதவுடலைச் சிறந்த முறையில் பாதுகாத்தல்
- புதைகுழியில் பிரேதப் பெட்டியைச் சுயமாக இறக்கும் கருவி.
- அழகான சமாதிகள்.

ஏ எவ் ரேமண்ட்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

ஆண்டவனை நினைவில் வைத்து அவனுக்கென்று அர்ப்பணம்செய்யப்பட்ட எந்தச் சிறிய பணியும் பெரிய பணியேயாகும்.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu N tiona Tamil Daily
Telegram: "ELLANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம்
20-ந் திகதி (3-3-70)


## தேயிலையில் இலங்கையும் இந்தியாவும்

தேயிலை மீதான ஏற்றுமதி வரியை இந்திய அரசு நீக்கியிருப்பது இலங்கைத் தேயிலைவர்த்தகத்தை வெகுவாகப் பாதிக்கும் என்ற அச்சம் இலங்கை வர்த்தக வட்டாரங்களில் தோன்றியுள்ளது. இந்த அச்சத்திற்கு நியாயமில்லாமலில்லை. இலங்கையைப் பொறுத்தவரையில்தேயிலை ரப்பர், தெங்குப் பொருள்கள் ஆகியவைகளே இலங்கையின் பிரதானஏற்றுமதிப் பொருள்கள். இவைகளில்தான் இலங்கையின் பொருளாதாரமே தங்கியிருக்கின்றது. சென்ற சில வருடங்களில் உலகச் சந்தையில் இலங்கைத் தேயிலைக்குப் போட்டி அதிகரித்து தேயிலை வர்த்தகத்தைப் பாதிக்கச் செய்தது. இந்தப் போட்டியைச் சமாளிப்பதற்கு இலங்கை பெருமுயற்சி செய்துவரும் இச் சமயத்தில் தேயிலை மீதான ஏற்றுமதி வரியை இந்தியா நீக்கியிருப்பது உலகச் சந்தையில் இந்தியத் தேயிலை விற்பனையை அதிகரிக்கச் செய்யும் இந்தியா தனது பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்காக தேயிலை மீதான ஏற்றுமதிவரியை நீக்கிஞல் அது உள்நாட்டு விஷயம்என்றும் அதன் சொந்த விஷயம் என்றும் சொல்லலாம் ஆனாலும் இது போன்ற விஷயங்களில் அயல் நாடுகளின் குறிப்பாக நட்புறவுடன் வாழும் சிறிய நாடான இலங்கையின் நலனையும் கவனத்தில் கொண்டு அதனுடனும் ஆலோசனை செய்து நடவடிக்கைகளைமேற்கொள்வதே சிறந்தது.

தேயிலை மீதான ஏற்றுமதி வரியை இந்தியா நீக்கிவிட்டதென்பதற்காக இலங்கையும் ஏற்றுமதி வரியை நீக்கிவிட முடியாது இந்தியாவைப் பொறுத்தவரையில் அதன் பொருளாதாரம் தேயிலையில் மட்டும் தங்கியிருக்கவில்லை. ஆகவே தேயிலை

தாரத்தைப் பாதுகாக்கவும் தேயிலை ஏற்றுமதியைக்காப்பாற்றவும் முடியும்.

இலங்கையில் தோட்டங்கள்கைமாறியதன் விளைவாகவும் இலங்கையில் தேயிலை உற்பத்திக்கு வழிகாட்டிய பலர் வேறு நாடுகளுக்குச் சென்று தேயிலை உற்பத்திக்கு வழிவகுத்ததாலும் நமது நாட்டின் தேயிலைக்கு உலகச் சந்தையில் போட்டி அதிகரிக்கக் காரணமாக இருந்தது. இப்போதும்இலங்கையிலுள்ளஇந்திய வம்சாவழியினர்பலரையும்இங்கிருந்து அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இந்திய இலங்கை ஒப்பந்தப்படி இலங்கையிலிருந்து ஐந்தேகால் லட்சம் இந்திய வம்சாவழியினர் இந்தியா செல்ல வேண்டும் இவர்களில்பெரும்பான்மையினரும் தோட்டத் தொழிலாளர்களே இவர்கள் தாய்நாடு திரும்பவிருப்பது காரணமாக இந்திய அரசாங்கம் அவர்களுக்குபுனர் வாழ்வளிப்பதற்காக புதிய தேயிலைத் தோட்டங்களைநிறுவத் தொடங்கியுள்ளது. இங்கிருந்து செல்லும் தோட்டத் தொழிலாளருக்குத் தேயிலைத் தோட்டங்களில் வேலை வாய்ப்புக் கிடைத்ததும் இலங்கைத் தேயிலை வர்த்தகம் மேலும் பாதிக்கப்படும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

எனவே நமது நாட்டைப் பொறுத்தவரையில் நாட்டின் வருமானத்துக்கு தேயிலை ரப்பர் ஆகிய விளைபொருள்களையே இனியும் அதிகம் நம்பியிருக்காமல் மாற்றுப் பயிர்த் திட்டத்தை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். அல்லது நமது தேயிலைக்கு இந்தியா போட்டியாக வராமலிருப்பதற்காக அனுபவமிக்க இந்திய வம்சாவழியினரான தோட்டத் தொழிலாளர் இங்கிருந்து செல்வ

# நினைக்க நினைக்க நெஞ்சம் வெடிக்கிறது!

# சாவே! உனக்கு சாவு வந்து சேராதோ?

நினைக்கவே நெஞ்சம் வெடித்து விடும் போலிருக்கிறது!

கற்பனைக்குக்கூட எட்டாத, கனவுக்கும் பொருத்தமில்லாத கோரச் சம்பவத்தை நடாத்திவிட்டு இயற்கை நிம்மதியாக இருக்கிறது

ஆனல்... அந்தக் கோரச் சம்பவத்தை பாலைதீவுக் கடல் பரிதாபமாகப் பலிகொண்ட அந்த நிகழ்ச்சியினை நெஞ்சத்தில் வைத்துக்கொண்டு நாம் நிம்மதியாக எப்படி இருப்பது?

முடியவில்லையே!

அந்தச் சம்பவம், அந்தக் கதை அந்தக் கணத்துடனே முடிந்திருந்தால், முற்றுப் பெற்றிருந்தால், 'முடிந்தது கதை' என்று நெஞ்சத்தை நிம்மதிப்படுத்தியிருக்கலாம் ஆனல்

கதைக்கு முற்றுப்புள்ளி வைக்காமல், அதனை ஆண்டவன் தொடர்கதையாக நீட்டிக்கொண்டு செல்லும்போது—

பாகுபாடில்லாமல் பலிகொண்டிருக்கும் கொடுமையிலும் கொடுமை!

'சாவே உணக்குச் சாவு வந்து சேராதா?' என்று கவிஞன் ஒருவன் பாடியதையே வாய்விட்டு அலறுகிறேன்......

### அழாமல் இருக்க முடியுமா?

பாலைதீவு பலிகொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் பிரேத ஊர்வலங்கள் அங்குமிங்குமாக யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளில் நடந்ததை நேரில் பார்த்தவர்கள்—

வாய்விட்டுக் கதறியழவே செய்திருப்பார்கள். ஊமையாய் பிறந்திருந்தாலும் கல்நெஞ்சனக இதுவரை வாழ்ந்திருந்தாலும், கொடுமைக் காரனக, கொலைக்காரனகப் பலியாய், இதுவரை காலத்தையும் கழித்திருந்தாலும்-

நிச்சயம் இந்தப் பிரேத ஊர்வலங்களைப் பார்த்து

ர்தான் கணவனை செல்வரத்தினத்தைப் பிரிந்து வாழ்ந்துவந்த இருபத்தேழுவயதான கைம்பெண் பிலோமினு அவரது மூன்று பிள்ளைகள், பிலோமினுவின் 18 வயதுத் தம்பியார் டொமினிக் ஆகிய ஐவரும் பாலைதீவுக்கு நேர்த்திக்கடன் கழிப்பதற்காகச் சென்ருர்கள்.

குடும்பத்தில் ஒருவருமே தப்பவில்லை கணவன் சென்ற இடத்துக்கே பிலோமினு என்ற அந்த ஏழைப் பெண்ணையும் அவளின்மூன்று குழந்தைகளையும் இறைவன் கொண்டுசென்று விட்டானு? பிலோமினுவின் தம்பி டொமினிக்கும் சேர்ந்து போய்விட்டான் அவனின் அக்காவுடனும், மருமக்களுடனும் ஆனல் டொமினிக்கை பிரேதமாகக்கூட உறவினர்களை 'இறைவன்' பார்க்க விடவில்லை.

பிலோமினுவின் குழந்தைகளான அந்தோனிப்பிள்ளை, விஜயன், செல்வம் ஆகியோர்

குடும்பத்தை வாழ்வித்து வந்த பீட்டர் வேதனை தாங்கமுடியாது. விம்மி விம்மி அழுகிருர். அவர்கள் கண்களில் கண்ணீர் வற்றி விட்டது. பிலோமினுவையும், டொமினிக்கையும் பெற்றவர்கள் வயிற்றுள் நெருப்பைவைத்துக் கொண்டிருப்பவர்கள் போல அழுது குளறி விசர் பிடித்தவர்கள் போல நிலை தடுமாறி பெயரைத் தந்தவர்கள் போலக் காட்சியளிக்கிருர்கள்.

பிலோமினுவின் சகோதரி ஜோசெப்பின்—

யாழ்ப்பாணத்திலுள்ள தனிப்பட்ட ஸ்தாபனமொன்றில் வேலை செய்து தன் அக்கா குடும்பத்துக்கு உதவியளித்துவந்தவர்—

கதறிக்கதறி அழுகிருர்; தலையை நிலத்தில் அடித்து அடித்து அழுகிருர்; அவர் கண்கள் சிவந்து, முகம் வீங்கி, நாக்கில் ஈரம் காய்ந்து, கதைக்கவே முடியாமல் சுயநினைவிழந்து......

ஐயோ! பலரது உயிரை ஒரே குடும்பத்தில் பலியெடுத்து, காணுததற்கு உயிரோடு வாழ்வபர்களை ஏன் சாகடித்துக் கொண்டிருக்கின்ருய்?

# தாய், மூன்று குழந்தைகள் பிரேதம் ஒன்ருகச் சென்ற கொடுமை!

ஐயோ! யாரிடம் வாய்விட்டுக் கதறி அழுதழுது மனிதகுலத்துக்கு நேர்ந்துவிட்ட இந்த அவலத்தைச் சொல்லுவது?

ஒரு குடும்பத்தில் ஒருவர் என்ருல் பரவாயில்லை! முழுக் குடும்பத்தையுமே ஈவிரக்கமில்லாமல் பலிக்கொண்டிருக்கிறதே!

பெற்ருேரை விட்டு பிள்ளைகளைப் பலியெடுத்திருக்கும் அநியாயம்!

பெற்ருேரையும் பிள்ளைகளையும் பலியெடுத்திருக்கும் கோரம்!

அண்ணனை விட்டு தம்பியை இரையாககியிருக்கும் கொடுமை!

விட்டு ''ஐயோ! ஐயோ!'' என்று கதறி அழுதிருப்பான்! இல்லாவிட்டால் —

இரண்டு சொட்டுக் கண்ணீராவது அர்ப்பணித்திருப்பான்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்துக்குச்செல்லும்வீதிக்கு முன்பாகவுள்ள மார்ட்டின் ரோட்டில் அன்ருடம் சீவித்துநிம்மதியாகவாழ்ந்து வந்த... ஒரு குடும்பத்தில் ஐந்து...பரை பாலைதீவு பலிகொண்டது. இவர்களில் ஒருவரது சடலம் கண்டுபிடிக்கப்படவில்லையாம். மற்றைய நான்கு சடலங்களின் பிரே... ஊர்வலமும் இறுதிக் கிரி...களும் நேற்று முன்

பத்து வயதுக்குக்குறைந்தவர்கள். இந்தக் கொடுமையை எப்படி வர்ணிப்பது என்றே தெரியவில்லை

### கும்மாளத்துக்கு பதில்

மார்டின் வீதியிலுள்ள இவர்கள் வாழ்ந்த வீட்டில் இப்போது மிஞ்சியிருப்பவர்கள்—பிலோமினுவின் தாய், தகப்பன், பிலோமினு...ன் கணவரின் சகோதரர்...ட்டர், பிலோமினு சகோதரி ஜோசெப்பின் குழந்தைகளின் கும்மாளம் கேட்ட அந்த வீட்டில் இப்போது 'அவலக்குரல்' தான் கேட்கிறது

- ராஜகோபால் -

இறைவா ஏன் உனக்கு இந்தச் சோதனை?

இவர்களுடைய மரணச் சடங்குகளை இவர்களது சுற்ருடலில் உள்ளவர்கள், உறவினர்கள், ஆசிரியர்கள், றேமண்ட்ஸ், குருக்கள், நண்பர்கள் இன்னும் பலர் முன்னின்று நடாத்திவைத்தார்கள்.

பிரேதங்கள் ஒன்றன்பின் ஒன்ருக ஊர்வலமாகச் சென்ற சோகக் காட்சிகளைக் கண்டவர்கள் தம்மையறியாமலேயே அழுதுவிட்டார்கள்! இதேபோன்று வேலணையிலும் 6 பிரேதங்கள் ஒன்றன்பின் ஒன்ருக மயானத்திற்குச் சென்ற காட்சியைக் கண்டவர்கள்—

கதறி அழுது கண்ணீர் விட்டனர்!

மயங்கி விழுந்தனர்!

இன்னும் எத்தனை... எத்தனை...

எந்த 'ஆறுதல்'களாலும் மாற்றி மறைத்துவிட முடியாத இந்தக் 'கொடுமை'க்

# ஜயாரன் எழுதுவது..

''ஒரு நல்ல பக்தரான திரு. பட்டக்கண்ணு குமாரசாமி நம்மை விட்டு மறு உலகம் சென்றுவிட்டார். சில விஷயங்களில் மிகச் சிறந்தவர்.''

என்று திருப்பணித் தவமணி புரக்டர் சிவசுப்பிரமணியம் கொழும்பிலிருந்து வருந்தி எழுதியுள்ளார். இச்செய்தியைக் கேட்டதும் திடுக்கிட்டேன் சமீபத்தில் கொழும்பு சென்றிருக்கையில் அன்பர் குமாரசாமி நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தார். அவரது மறைவு சிறப்பாக ஈழத்து சைவசமூகத்துக்குப் பெருநஷ்டமாகும்.

கொழும்பு விவேகானந்த சபையின் தனதிகாரியாகப் பல்லாண்டு இருந்து புதிய கட்டடங்களைக் கட்டியவர். வெலிக்கடை, மகாரை சிறைச்சாலைகளிலும் வெலிசரை நெஞ்சுநோய், ஹெந்தளை தொழுநோய் ஆஸ்பத்திரிகளிலும், சைவசமயிகளுக்கான கூட்டு வழிபாடுகளுக்கு ஒழுங்குசெய்து பல அன்பர்களையும் வாராவாரம் அங்கு தமது ''மயில் வாகன''மாகிய பசுநீலக் காரிலே அழைத்துச் செல்லுவர். பணத்தால் மட்டுமன்றி, உடல் உழைப்பினுலும் சமூகத்துக்கும், சமயத்துக்கும் நல்ல பணிசெய்து வந்த இந்த அன்பரின் பிரிவு எளிதில் நிறைசெய்ய முடியாதது. அவர் ஆன்மா சாந்தி அடைக!

0 0 0

புகழ்பெற்ற நகைத் தொழில் குடும்பத்தைச்சேர்ந்த அவர் சீமை சென்று மின்சார என்ஜினியரிங் படித்து, பட்டம் பெற்றுத் திரும்பியதும். இஞ்சினியராக வேலை பார்த்தவர். சம்பள அடிமையாக இருக்க அவருக்குப் பிடிக்காமல், தமது குலத்தொழிலை விருத்தியாக்கி நகைத்தொழிலை நாணயமாக, நவீன முறையில் நடத்தி, பலருக்கு வேலை கொடுத்து பெரும் பணம் ஈட்டி, அதை நல்ல காரியங்களுக்கும் பயன்படுத்தியும் வந்தார்.

தம் குலத்தொழிலைச் செய்வது இளப்பமென்றும், அரசாங்க உத்தியோகம் செய்தால்தான் கௌரவமென்றும் பலர் கருதுகிருர்களல்லவா? அவர்களுக்கெல்லாம் நல்ல வழிகாட்டி, குலத்

மாதச்சம்பளம் எடுத்து, ஓய்வு பெற்றிருப்பார். பலருக்கும் வேலை கொடுத்து அதிகம் சம்பாதித்து, சுதந்தரமாக வாழ்ந்து, சமூகத்துக்கும் நல்ல தொண்டாற்றக்கூடிய இவ்வித வாய்ப்பு அவருக்குக் கிடைத்திருக்குமா?

ஒருவர் குலத்தொழில் தான்செய்யவேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆனல் வழிவழியாகவந்த ஒரு தொழில் திறமை நம் இரத்தத்தில் ஊறி இருக்கின்றது. ஒரு சைத்திரீக நண்பரின் புதல்வர், தந்தையை விட நன்றாகச் சித்திரம் வரைவதைப் பார்த்தேன். அது இயற்கையாக அமையும் ஒரு திறமை. ஒவ்வொருவரும் தம் இயற்கைத் திறனை உணர்ந்து, அதற்குத் தருந்தபடி தமது வாழ்க்கைத் தொழிலை நிர்ணயித்துக் கொண்டால், வேலையில்லாப் பிரச்னைகளும் பெரிதும் தீருவதாக இருக்கக்கூடும்.

சில குடும்பங்களிலே தந்தையிடம் அவரது பிள்ளைகளே தொழிலைக் கற்று அவக்கு உதவியாகவும் தொழில் செய்வது, அக்குடும்பத்துக்கே எவ்வளவோ நன்மையாக இருக்கும்! தொழிலில் எல்லாம் சமம். உயர்வு தாழ்வு கிடையாதென்பதை உணர்ந்தால், குலத்தொழிலை யாரும் அலட்சியம் செய்யமாட்டார்களல்லவா?

0 0 0

திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையின் ஆதரவில் தலைமன்னர் ஸ்டேசனிலே, ஒரு சிற்றுண்டிச்சாலையை அமைத்து, சுத்த உணவு கிடைக்கும்படி செய்வது, பல பிரயாணிகளுக்கும் உபசாரமாக இருக்கும். தலைமன்னர் ஸ்டேசன்களில் நல்ல உணவு கிடைப்பதாயின், அங்கு பிரயாணிகள் தங்கியிருக்கவும், திருக்கேதீச்சரம் ஸ்தலத்துக்குச் சென்று தரிசிக்கவும் முடிவதாக இருக்கும். திருப்பணி சபையாரும், சிறப்பாக அப்பகுதியிலுள்ள ரயில்வே சைவ ஊழியர்களும் இதில் கவனமெடுத்தால், இது நிறைவேறுவது கஷ்டமல்ல. அவ்வித சிற்றுண்டிச்சாலையில், திருப்பணிக்காக ஓர் உண்டியலையும் வைக்கலாம்.

0 0 0

கற்றதே லொன்றுமில்லை காரிகையாரோடாடிப்,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மதி வரியை இந்தியா நீக்கி விட்டதென்பதற்காக இலங்கையும் ஏற்றுமதி வரியை நீக்கிவிட முடியாது இந்தியாவைப் பொறுத்தவரையில் அதன் பொருளாதாரம் தேயிலையில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அதற்குவேறு வழிகள் பலவுண்டு, கைத்தொழில் கனரகத் தொழில்களில் இலங்கையைவிட இந்தியா வெகுவாக முன்னேற்றமடைந்துள்ளது தேயிலையை மட்டுமல்ல வேறுபல உற்பத்திப் பொருள்களையும் இந்தியா ஏற்றுமதி செய்கிறது.

ஏற்றுமதி வரியை இந்தியா நீக்கிவிட்டாலும் இலங்கைத் தேயிலைக்கு உலகச் சந்தையில் தனியானதொரு மதிப்புண்டு இலங்கைத் தேயிலையின் தரத்தைக் குறையவிடாமல் நிலைநாட்டி வந்தாலும் உலகநாடுகள்பல வற்றுடன் வர்த்தக உறவுகளைப் பலப்படுத்துவதாலும் இலங்கையின் பொருளாதாரம் மேற்கொள்ள வேண்டும். அல்லது நமது தேயிலைக்கு இந்தியா போட்டியாக வராமலிருப்பதற்காக அனுபவமிக்க இந்திய வம்சாவழியினரான தோட்டத் தொழிலாளர் இங்கிருந்து செல்வதைத் தடுக்க வழிகாண வேண்டும்,

இது ஒருபுறமிருக்க இந்தியா உண்மையிலேயேஇலங்கையின் நட்பை விரும்புகிறதென்றல் தேயிலை வர்த்தகம் சம்பந்தப்பட்ட வரையிலாவது இலங்கையும் இந்தியாவும் கூட்டாகச் சில நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வழிகாண வேண்டும். மொரிசியஸ் மகாநாட்டுத் தீர்மானத்தின்படி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் தேயிலைக் 'கோட்டா' முறையொன்று நிர்ணயிக்கப் பட்டிருப்பதால் இலங்கையும் இந்தியாவும் கூட்டாகத் தேயிலை வர்த்தகத்தில் ஈடுபடுவது கடினமல்ல.

ருக்கும் அநியாயம்!

பெற்றோரையும் பிள்ளைகளையும் பலியெடுத்திருக்கும் கோரம்!

அண்ணனை விட்டு தம்பியை இரையாக்கியிருக்கும் கொடுமை!

குழந்தை, குமரி, பெரியவர், கிழவி என்றெல்லாம் ஐந்து பேரை பாலைதீவு பலி கொண்டது. இவர்களில் ஒருவரது சடலம் கண்டு பிடிக்கப்படவில்லையாம். மற்றைய நான்கு சடலங்களின் பிரேத ஊர்வலமும் இறுதிக் கிரியைகளும் நேற்று முன் தினம் நடந்தன.

சில வருடங்களுக்கு முன் கணவரின் சகோதரர் இறந்..., பிலோமினு சகோதரி ஜோசெப்பின் குழந்தைகளின் கும்மாளம் கேட்ட அந்த வீட்டில் இப்போது 'அவலக்குரல்' தான் கேட்கிறது

தனது சகோதரர் இறந்த பின்னர் தன் அண்ணன் கதறி அழுது கண்ணீர் விட்டனர்!

மயங்கி விழுந்தனர்!

இன்னும் எத்தனை... எத்தனை...

எந்த 'ஆறுதல்' களாலும் மாற்றி மறைத்துவிட முடியாத இந்தக் 'கொடுமை'க்குக் காலன்தான் பதில் சொல்லவேண்டும்.

தம் குலத்தொழிலைச் செய்வது இளப்பமென்றும், அரசாங்க உத்தியோகம் செய்தால்தான் கௌரவமென்றும் பலர் கருதுகிறார்கள் அல்லவா? அவர்களுக்கெல்லாம் நல்ல வழிகாட்டி, குலத்தொழில் செய்வது இளப்பமல்லவென்றும், வெற்றியும், இன்பமும் இதில்உள்ளதென்பதையும் அறிவுறுத்தியுள்ளது இவ்வன்பரது வாழ்க்கை. அரசாங்கத்தில் பெரிய இஞ்சினியராக வந்திருந்தாலும், குறிப்பிட்ட

நிறைவேறுவது கஷ்டமல்ல. அவ்வித சிற்றுண்டிச்சாலையில், திருப்பணிக்காக ஓர் உண்டியலையும் வைக்கலாம்.

0 0 0

கற்றதே லொன்றுமில்லே காரிகையாரோடாடிப், பெற்றதேற் பெரிதும் துன்பம் பேதையேன் பிழைப்பிணுலே, முற்றிணுவர் வந்து முறைமுறை துயரம் செய்ய அற்றுநானலந்து போனேன் ஆரூர்மூலட்டணரே.

—அப்பர் அடிகள்

# இந்துப் பல்கலைக்கழகம் உலகில் புதுமையான விஷயமல்ல

## வில்மட் பெரேராவின் கருத்துக்கு ஜி. ஜி. யின் பதில்

திரு. வில்மட் பெரேரா சமீபத்தில் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியின் அறிக்கையொன்றை நான் ஒருபத்திரிகையில் பார்த்தேன். அதில் முக்கியமானது அவர் உயர் கல்விபற்றிக் குறிப்பிட்டுளளவையாகும். அதில் சிலவற்றிற்கு நான் விளக்கம் கொடுக்க வேண்டியவனுகவுள்ளேன்.

உயர் கல்விபற்றி திரு வில்மட் பெரேரா குறிப்பிடுகையில் ஆங்கிலம் மிக முக்கியம் எனக் குறிப்பிட்டுள்ளார் அவரின் இக்கருத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். சர்வதேச மொழியாகிய ஆங்கிலத்தைப் பல்கலைக் கழகக்கல்வி பெறும் மாணவர்கள் கற்பதிலிருந்து தடுக்கக் கூடாது உலகிலுள்ள மக்களில் அதிகமானேர் ஆங்கில மொழியையே பேசுகின்றனர்.

மேலும் திரு, வில்மட் பெரேரா தெற்கில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டும் எனக்குறிப்பிட்டிருந்தார். அவரது இக்கருத்தையும் நான் ஏற்கின்றேன் தெற்கிலிருந்து அதிகமான மாணவர்கள் உயர்கல்வி பெற பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்களுக்கு வருகிறார்கள் தெற்கில் ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதற்குப் போதிய மாணவர்கள் தொகையிருப்பின் அங்கு ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படுவது நியாயமானதொன்றேயாகும். இதற்கு பூசா குதிரைப் பந்தயத்திடல் பொருத்தமான நிலையமாகவமையும் மற்ற இடங்களோடு ஒப்பிட்டு நோக்கும் போது ஒவ்வொரு வருடமும் 450 மாணவர்கள் பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்களுக்கு உயர் கல்வி பெறச் செல்லுகிறார்கள். இதனுல் வடக்கிலிருந்து பல்கலைக்கழகக்கல்வி பெறும் மாணவர் தொகை ஒருவருடத்துக்கு கிட்டத்தட்ட 1,500 ஆகவுள்ளது; இதைவிட வடக்கிலிருந்து ஏறக்குறைய 2000 மாணவர்கள் தென் இந்தியாவுக்குச் சென்று பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுகிறார்கள். இவற்றையெல்லாம் நோக்கும்போது வடக்கில் ஒருபல்கலைக்கழகம் அவசியம் என்பது புலனுகிறது. இந்த விடயத்தில் திரு. வில்மட் பெரேராஎனது கருத்தோடு உடன்பட்டகருத்துடையவராக விருப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

'பல்கலைக் கழகத்தில் சகல இனமாணவர்களுக்கும் இடமளிக்க வேண்டும் மாணவர்களைப் பிரித்து தள்ளிவைக்கக்கூடாது' என்ற அவரது கருத்தையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். பேராதனை, கொழும்பு பல்கலைக்கழகங்கள் விசேஷ நிறுவனங்களாகி அங்கு உயர்பட்டப் படிப்புகளும் சிறப்புக் கல்வியும், ஆராய்ச்சிப்படிப்பும் இடம்பெறவேண்டும். இந்த இரு பல்கலைக்கழகங்களிலும் நாட்டின் எல்லாச் சமூகத்தைச்சேர்ந்தமாணவர்களும் அனுமதிக்கப்பட வேண்டும்.

திரு. வில்மட் பெரேரா தனது கருத்தில் 'இந்து' பல்கலைக்கழகத்துக்கு எதிர்ப்புத்தெரிவித்துள்ளார். வடக்கிலே நிறுவப்படும் பல்கலைக்கழகம் 'இந்துப் பல்கலைக்கழகம்' எனப் பெயரிடப்படுவதற்கான காரணத்தைத் தெரிந்து கொள்ளாது தப்பபிப்பிராயம் கொண்டுள்ளாரோ என நான் பயப்படுகின்றேன். ஏனெனில்இங்கு ஸ்ரீ லஸ்ரீ ஆறுமுகநாவலர், சேர் பொன் இராமநாதன் ஸ்ரீமழவராயர் ஆகியோரது நன்கொடைகள் உள்ளன இதை அவரும் ஒத்துக்கொள்வார். அவர்களது நன்கொடை தஸ்தாவேஜுகளில் சைவப்பிள்ளைகளுக்கு வேதாகமங்கள் கற்பிக்கப்பட வேண்டுமென அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது, அறிவாளிகளும் சிறப்புவாய்ந்த பெரியோர்களுமான இவர்களுக்கும் இவர்களது மேற்படி வாசகத்திற்கும் மரியாதையளித்தற் பொருட்டே 'இந்து' என்ற பெயர் ஆலோசிக்கப் பட்டது. சேர் பொன்னம்பலம் இராமநாதனது ஒரு நன்கொடையில் பரமேஸ்வராக் கல்லூரியில் கல்வி பெறுவதற்கு எந்த மதத்தைச் சேர்ந்த மாணவரையும் சேர்க்கவேண்டும். ஒருவருக்கும் தடைவிதிக்கக் கூடாது எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

'இந்து' பல்கலைக்கழகம் என்ற பெயர் குறித்து இன்னும் தப்பபிப்பிராய முடையவர்களுக்கு பெனரிஸ் இந்து பல்கலைக்கழகம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியன பற்றிக் குறிப்பிட விரும்புகின்றேன் பனரிஸ் இந்துப்பல்கலைக்கழகம் முதலில் ஒரு சிறிய இந்துக்கல்லூரியாகவே ஆரம்பிக்கப்பட்டது. இதுபின்னர் பண்டித்மோகன் மாளவியா என்னும் இந்துப் பேரறிஞரின் தீவிர முயற்சியால்ஒரு பல்கலைக்கழகமாக உருவாகியது. இன்னும் இங்கு இந்து கலாச்சாரம். தத்துவ நுண்கலைகள் ஆகியன பற்றிய கல்விக்கு தனிப்பிரிவு ஒன்றுள்ளது. இத்துடன் மற்றும் பூரணத்துவம் வாய்ந்தவொரு பல்கலைக்கழகத்திலுள்ள சகல துறைகளும் இங்குள்ளன. இதில் உள்ள ஓரிரு தொழில்நுட்ப பிரிவுகள் இந்தியாவிலேயே சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. 'இந்து' என்றமுதலில் உள்ள பெயரை விட வேண்டுமெனஎடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் தோல்விடைந்தது. இங்கு மதஅடிப்படையில் பாகுபாடு காட்டப்படுகிறதுஎன்று இதுவரை ஒருவரும் குறைகூறவில்லை,

அடுத்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை நோக்கும்போதும் அது முதலில் ஒருசிறிய இந்துக் கல்லூரியாகவே ஆரம்பிக்கப்பட்டு அங்கு தமிழ் இந்துமதம் இசை முதலியவற்றில்மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது பின்னர் காலஞ்சென்ற இராஜாசேர் அண்ணாமலைச் செட்டியாரது பெரும்நன்கொடையோடும் அரசாங்கத்தின் உதவியோடும் இக்கல்லூரி பெரிய பல்கலைக்கழகமாக ஸ்தாபிக்கப் பட்டது இப்பூரணத்துவம் வாய்ந்த பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியம், இந்துமத தத்துவம், இசை, நுண்கலைகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது பொறியியல் பிரிவே இப்பல்கலைக்கழகத்தில் கடைசியாக நிறுவப்பட்டபிரிவாகும் இப்பல்கலைக்கழகத்தின் சுற்றாடலில் வைத்தியசாலை வசதியின் மையால் இங்கு வைத்தியப்பிரிவுநிறுவப்படவில்லை

எனவே திரு வில்மட்டு பெரேராவும் மற்றும் வடக்கில் நிறுவம்படும் பல்கலைக்கழகம் 'இராமநாதன்இந்து பல்கலைக்கழகம்' என்றபெயரில்நிறுவப்படவேண்டுமென்பதற்கு எதிராகத் தவருன கருத்துக்களையுடையவர்களும் மேற்கூறியவற்றையுணர்ந்து தங்கள் தப்பபிப்பிராயங்களை நீக்குவர் என நான் நம்புகிறேன்

கடந்த இருவரவுசெலவுத் திட்டங்களிலும் இராமநாதன் பல்கலைக்கழகத்துக்காக அடையாளநிதிஒதுக்கப்பட்டதையும் இவர்கள் மறக்கக் கூடாது.

0 0 0

ஆசிரியருக்குக் கடிதம்

# இவர்களை அரசாங்கம் கௌரவிக்கவேண்டும்

5-ம் வட்டாரத்திலுள்ள குருநெக்ளெமேஷன் இறங்குந் துறையிலிருந்து பாலைதீவு புனித அந்தோனியார் திருவிழாவுக்கென உயிருடன் சென்ற பக்தர்கள் சிலரை வர்களாகத்திரும்பவும்அதே துறையில் சேர்க்கப்பட்ட கண்ணீர்சிந்தும்சிந்தாகுலச் செய்தி மக்கள் யாவரையும் பெரும் துயரத்திலாழ்த்தியுள்ளது. உயிர் நீத்தவர்களின் குடும்பங்களில் உள்ளவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்போடு, இறந்தோரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேம்.

தங்கள் உயிரைத்துரும் பெனமதித்துப்பாரிய அலைகொண்ட ஆழியில் இத்தனை உயிரற்றஉடல்களையும்தேடி எடுத்துதவிய குருநகர் வாழ் உன்னத தியாகச் செம்மல்களை மக்கள் ஒரு போதும் மறக்க முடியாது. தங்கள் தொழிலையும் விடுத்துத் தம் இயந்திரப் படகுகளுடன் அலைகள் மத்தியில் போராடிச் சடலங்களை மீட்ட இவர்களுக்கு மக்கள் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளார்கள். தனது இயந்திரப் படகுடன் பல உடல்களைத்தேடிக்கரை சேர்த்த பாலைதீவு ஆலயக் கட்டளைக் குரவர் வண. மொறேு அடிகளாரின் பெருந்தன்மையையும், தியாகத்தையும் மக்கள் மெச்சக்கடமைப்பட்டுள்ளார்கள்.

ஆகவே இவர்களுக்கு இறந்தவர்களின் குடும்பங்கள் சார்பிலும், மற்றும் மக்கள் சார்பிலும் பகிரங்கமாக நன்றி கூறுகின்றேன்.

இப்படியான தியாக சிலர்களை அரசாங்கம் கௌரவிப்பின் மற்றோரும் இவ்வழியைப்பின்பற்றஉற்சாகமூட்டுவதாயிருக்கும். இச்சடலங்களை உரியவர்களுக்குகிடைக்கக்கூடியதாக ஒழுங்குகள் செய்த யாபேரையும் பாராட்டி நன்றி கூறுகின்றேம்.

இனிமேலாவது இப்படியான விபத்துகள் நிகழாவண்ணம் யாத்திரை காலங்களில் இவ்விறங்குந் துறையை அரசாங்கம் கண்காணித்துக்குறிக்கப்பட்ட தொகையான பிரயாணிகளை மாத்திரம் ஏற்றவும். இரவு நேரங்களில் பிரயாணிகள் செல்லாது தடை செய்யவும் ஒழுங்குகள் செய்யுமென நம்புகின்றேம்.

எஸ் ஜே. அன்ரனி,
5-ம் வட்டார உறுப்பினர்;
யாழ். மாநகரசபை

# இடமாற்றம்

கோப்பாய், திங்கள்

கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியில் மாவட்ட வைத்திய அதிபராகக்கடமையாற்றிய திரு. எஸ், இராசரத்தினம் இம்மாதம் முதல் களுத்துறைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# "கலைஞர்களிடம் வறுமை ஒழிக்கப்பட வேண்டும்"

## யாழ் கலைக்காட்சி மகாநாட்டில் வித்தியாதிபதி உரை

பருத்தித்துறை, திங்கள்

'கலைக்கு மட்டுமன்றி, கலைஞருக்கும் இந் நாட்டில்மதிப்புக் கொடுக்கப்படல் வேண்டும். சித்திரச்சாலையிலும் நூதனசாலையிலும் கலைப் படைப்புகள் பாராட்டப் படும்போது, அவற்றின் கர்த்தாக்களாகிய கலைஞர் குடிசைகளில் வறுமையுடன் போராடிவரும் நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டியது அவசியம்'.

இவ்வாறு வடமாநிலக் கல்வியதிபதி திரு எஸ். தணிகாசலம், நேற்றுமுன்தினம் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வடபகுதி கலை, கைப்பணி, சித்திர ஆசிரியர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேசும் போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், கலை, கைப்பணி, சித்திரம் ஆகிய நுண்கலைகளுக்குப் பாடசாலைகளில் மட்டுமன்றிப் பல்கலைக் கழகங்களிலும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்றும், அதன் மூலமே நமது நாட்டுக் கலைஞருக்கு ஊக்கமளிக்க முடியுமென்றும்கூறிஞர்.

மேற்படி மாநாட்டை ஒழுங்கு செய்த வடமாநில கலை, கைப்பணி, சித்திர, வித்தியாதரிசி திரு மு கனகசபை பேசுகையில், கலைப்பாடங்கள் போதிக்கும்ஆசிரியனின் வீட்டு நிலைமைகள் மட்டுமன்றி, பாடசாலைகளில் அவர்களின் கடமையாற்றும் பகுதிகளும் சீர்திருத்தப்படல் வேண்டுமென்றும் நல்ல கட்டிடங்கள் உள்ள பாடசாலைகளில் கலைகளுக்கென ஒருபகுதி ஒதுக்கப்பட வேண்டுமென்றும் கூறிஞர்.

ஆசிரியர் திரு அ சுப்பிரமணியம் நன்றி கூறிஞர்.

# தலைவர்

காலி, திங்கள்

காலி நகரமண்டபத்தில் லங்கா சமசமாஜக்கட்சியின் கட்டுப்பாட்டிலுள்ள அகில இலங்கை உள்ளூராட்சி தொழிலாளர் யூனியனின் 25 வது வருடாந்த கூட்டம் நடைபெற்றது. திருமதி விவியன் குனவர்தனு தலைமையில் கூட்டம் நடந்தது. திருமதி விவியனே மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

# கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை

சங்கானை, திங்கள்

அராலி தெற்கைச் சேர்ந்தவரும் நான்கு பிள்ளைகளின் தாயுமான செல்லன் இரத்தினம் (வயது 25 கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இவர் கடந்த மூன்று வருடங்களாக சித்தசுவாதீனமற்றிருந்தார் என மரண விசாரணை அதிகாரி திரு. கே. சேனுதிராசா நடாத்திய விசாரணையில் தெரிய வந்தது. டாக்டர் பத்மநாதன் பிரேத பரிசோதனை நடாத்திஞர். தற்கொலை எனத் தீர்புவழங்கப்பட்டது.

# ஸ்தலத்தில் கைது

மீதோட்டமுல்லை, திங்கள்

மாலிகாவத்தையிலுள்ள சி டபிள்யூ ஈ ஸ்தாபனத்துக்குச் சொந்தமான சுமார் ஐயாயிரம் ரூபா பெறுமதியான இரும்புக்கம்பிகள் திருட்டுப் போனதையொட்டி ரோந்துப் பொலிசார் ஒரு கோஷ்டியினரைக் கைது செய்தனர்.

நடுஇரவில் நடத்தப்பட்ட இக் களவில் பொலிசார் எம் பந்துபால என்பவரை ஸ்தலத்திலேயே கைது செய்தனர்.

இக் களவு சம்பந்தமாகப் பொலிசார் மேலும் இருவரைத்தேடுதல் செய்கின்றனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org